உடனடியாக செய்ய வேண்டியதென்ன?

மந்திரிசபையின் உணவுக் கொள்கை விமர்சனம்

ஜனசக்தி

ஆசிரியர் : ப. ஜீவானந்தம்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு கமிட்டி வாரப் பத்திரிகை

மலர் 4. இதழ் 36 | புதன்கிழமை 5—6—46 | விலை 2 அணா (வெளிநாடு : 0-2-6)

[illegible]ப்ரல் மாதம் 30-ந் தேதி காலை நமது மாகாணத்தில் காங்கி[illegible]ஸ் மந்திரி சபை அதிகாரத்திற்கு [illegible]ந்தது.

“ரொம்பவும் சரி, இனி பயம் [illegible]ர்ந்தது. கள்ள மார்க்கெட் பீடை [illegible]ழிந்து போகும்; இருக்கிற அரிசி [illegible]ஞ்சம் என்கிற துவாரத்தின் வழி[illegible]ய கள்ள மார்க்கெட்டுக்கு போய்ச் [illegible]சராமல், ஜனங்களின் கைக்கு [illegible]ந்து சேரும்; அதிகார தேவதை[illegible]ளின் தர்பார் ஒழியும்” என்று நம்[illegible]க்கையாக பெருமூச்சு விட்டார்[illegible]ள் ஏழை எளிய விவசாயிகளும், தொழிலாளிகளும், நகரங்களிலுள்ள பொது மக்களும்.

“முந்திய தேர்தலில் ஜஸ்டிஸ் கக்ஷியை ஆதரித்த நாம், இந்தத் தேர்தலில் காங்கிரசை ஆதரித்தோமல்லவா, காங்கிரசுக்கு பணமும் கொட்டித் தந்தோமல்லவா? இன்று வந்திருக்கும் மந்திரி சபை நம்மிடம் நைசாக நடந்து கொள்ளும். உணவு தானிய விலைகளை அதிகப்படுத்தும்படி கேட்போம்; மொத்த வியாபாரம் செய்வது நம் கையிலேயே வைத்திருக்கும்படி செய்வோம்; கண்ட்ரோல் கட்டுப்பாடுகளை நீக்கச் செய்வோம். கிராமத்திலேவேரூன்றி விட்ட இந்த ‘பாழாய்ப்போன, மாஸ்கோ பிறவிகளான’ கம்யூனிஸ்டுகளின் விவசாய சங்க இயக்கத்தை காங்கிரஸ் மந்திரி சபை நசுக்கிவிடும்படிச் செய்வோம். காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் தகராறு தான் இருக்கவே இருக்கிறதே, ரொம்ப ஜோர்!’ —இந்த யோசனையிலே தஞ்சாவூர் பெரிய மிராசுதார்களின் நாவில் ஜலம் ஊறுகிறது; கள்ள மார்க்கெட் நடத்தும் வியாபாரிகள் தொந்தியை தடவிக்கொள்கிறார்கள்.

அவரவர்களின் நலன்களுக்கும் தேவைகளுக்கும் ஒட்டினாற் போல அவரவர்கள் கணக்கு போடுகின்றனர், மந்திரிசபை வந்தவுடன்.

இப்படி கணக்குப் போடப்பட்டு வந்த காலத்தில்தான் காங்கிரஸ் மந்திரிகள் நமது மாகாண உணவு நிலைமையைப் பற்றி நேராக ஆராய வேண்டும் என்று கூறி பல ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள்; 24 மணி நேரத்தில் சுற்றி விட்டுத் திரும்பி வந்து சேர்ந்தனர். ஜில்லா அதிகாரிகளையும் மிராசுதார்களையும் கண்டு பேசி வந்துள்ளனர். ஏற்கனவே ஜனங்கள் அறிந்திருந்த உண்மையான கஷ்ட நஷ்டங்களைப் பற்றிப் பேசினர். அறிக்கைகள் விட்டனர்.

சென்ற வாரம் மாகாண சட்ட சபையில் பிரதம மந்திரி ஸ்ரீ பிரகாசம் மந்திரி சபையின் உணவுக் கொள்கையை விவரித்து ஒரு அறிக்கை சமர்ப்பித்து விவாதம் நடந்து முடிந்திருக்கிறது.

இந்த சர்க்கார் அறிக்கையின் நல்ல அம்சங்களையும், தீய அம்சங்களையும் ஒரு புறத்தில் ஆராய்ந்து உணவுப் பஞ்சத்தைப் போக்க என்ன வழியென்பதையும் பார்ப்போம்.

சர்க்கார் அறிக்கை

முதன்முதலாக, மந்திரி சபையின் உணவு அறிக்கை இதற்குமுன் 7 வருடகாலமாக ஆட்சிபுரிந்த ஆலோசகர் சர்க்காரை ‘சபாஷ், நன்றாக வேலை செய்தீர்கள்’ என்கிறமுறையில் முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிறது. இரண்டாவதாக, இதுவரையில் ஆலோசகர் சர்க்கார் ஜனங்கள்மீது நம்பிக்கை வைக்காது தனது கொள்முதல் திட்டத்தை—எவ்வளவு தானியம் கொள்முதல் செய்யக்கூடியது, ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்த அளவுக்கு கொள்முதல் செய்ய திட்டமிட்டது, எவ்வளவு தூரம் அது நிறைவேறியது, அல்லது நிறைவேறவில்லை முதலியன—ரகஸ்யமாகவே வைத்து வந்திருக்கிறது. கொள்முதல் திட்டத்தை தோற்கடித்தவர்கள் யார், கொள்முதலுக்கு வராது கள்ள மார்க்கெட்டில் பதுங்கிவிட்ட தானி[illegible]த்தின் அளவு என்னவென்பது [illegible]னங்களுக்குத் தெரியாமலே இருந்து வந்தது. இந்த விஷயங்களைப் பற்றி அறிக்கை மௌனமாகவே இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

சென்னை மாகாணத்திற்கு இன்று [illegible] வரும் அக்டோபர் மாதம் முடி[illegible] [illegible]வேண்டிய தானிய [illegible] 12,72,000 டன் பற்றா[illegible] [illegible]று மதிப்பிடப்படுகிறது. [illegible]கொடுக்கப்பட்டுவரும் 12 [illegible]ஷன் அளவை க[illegible] [illegible]ண்டு நிர்ணயித்த எண் [illegible] இந்த பற்றா[illegible]குறை[illegible] [illegible]என்ப[illegible]

மந்திரி சபை கவனஞ்செலுத்தப் போகிறது. அதாவது, வெட்டுப் போடப்பட்ட ரேஷனை பழைய 1 பவுண்டு கணக்குக்கு உயர்த்த முயற்சிப்பது என்பது சர்க்காரின் நோக்கமில்லை. இருக்கிற 12 அவுன்சையே குறைக்காது பார்த்துக் கொள்ள முடியுமா வென்ற சிந்தனையில் சர்க்கார் இருக்கிறது.

12,72,000 டன் என்ற எண் மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்ட எண் என்று தெரிகிறது. அதைப் பற்றி அப்புறம் பார்ப்போம்.

இந்தப் பற்றுக்குறையை சரிக்கட்ட ஸ்ரீ பிரகாசம் போடும் கணக்கு பின்வருமாறு:—1. ஏற்கனவே கையிலுள்ள தானிய இருப்பு, 5,21,000 டன்; 2. இறக்குமதி செய்யப்போவதாக மத்திய சர்க்கார் வாக்குறுதி செய்திருப்பது 1,46,500 டன்; 3. இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் விவசாயிகளிடம் இருப்பது, சேகரம் செய்தால் கிடைக்கக்கூடியது 3.36,000 டன். ஆக மொத்தம் 10,04,000 டன் கைக்கு வரலாம். பாக்கி 2,68,000 டன் தானியத்துக்குத்தான் வழியில்லை. அதுவும், ‘கடவுள் புண்ணியத்தில்’ (அல்லது அமெரிக்காவின் புண்ணியத்தில்) கிடைத்துவிட்டால் இந்த 12 அவுன்ஸ் ரேஷன் திட்டம் அக்டோபர் முடிய நிலைக்கும்.

ஆபத்து உண்டு!

‘துண்டு விழுவது 2½ லட்சம் டன் தானே; பாக்கி யாவும் சரியாய் விடும் என்று மனதைத் தேற்றிக் கொள்ள தயாராகாதீர்கள்! உணவுப் பஞ்ச ஆபத்து அவ்வளவு எளிதில் போய்விடப் போவதில்லை.

ஏனெனில், திட்டத்தை மேலும் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். வெளியிலிருந்து இறக்குமதியாகவேண்டியது மட்டும் மொத்தம் 4,14,000 டன்களாகும். ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்திய சர்க்கார்களின் உணவுக் கொள்கை அம்பலத்திற்கு வந்துகொண்டிருக்கும் இந்நாளில், வாஷிங்டன் உணவு போர்டு தலை குப்புறக் கவிழ்ந்து விட்ட இந்தச் சமயத்தில் 4 லட்சத்துக்குமேல் இறக்குமதியாக வேண்டும் என்று மேற்கு நோக்கி கும்பிட்டால் மாத்திரம் அன்ன வரம் கிடைத்துவிடப் போவதில்லை.

இரண்டாவதாக, கொள்முதல் செய்யப்படக்கூடியது 3,36,000 டன் என்று கணக்கு தெரிவிக்கிறது. இது பூராவும் கொள்முதல் ஆகுமா வென்பதுபற்றி மந்திரி சபையே அதே அறிக்கையில் சந்தேகப்படுகிறது. ஏனெனில் குறைந்த காலத்தில் சாகுபடி செய்யக்கூடிய தானியம் அக்டோபர் முடிந்த பின்னர்தான் அறுவடையாகும் என்பது தெளிவாக இருக்கும் போது, அந்த அறுவடையாகக் கூடிய தானியத்தையும் செப்டம்பர், அக்டோபருக்குள் கொள்முதல் செய்யலாம் என்று திட்டமிடுவது வேடிக்கைதான்.

தமிழ் நாட்டை பொறுத்த மட்டில் நமக்குத் தெரியும். தஞ்சாவூர் ஜில்லாவில் குருவை அறுவடை செய்ய 4 மாதங்கள் பிடிக்கும். அதுவும் மேட்டூர் அணையில் சாதாரணகாலத்தில் மே மாத மத்தியில் தண்ணீர் விடப்பட்டு ஜூன் மாத மத்தியில் பயிரிட ஆரம்பித்தால் அறுவடையாக 4 மாதங்களாகும். இவ் வருடமோ ஜூன் 15-ந் தேதி வாக்கில் தான் ஜலம் விடப்போவதாகத்தெரிகிறது. தண்ணீர் குறைந்திருப்பதால் அதிலும் சந்தேகம் இருந்து வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் சில பாகங்களில் கார் பயிரும் அறுவடையாக 4—4½ மாதங்கள் பிடிக்கும். அங்கும் பாபநாசம் தேக்கத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருப்பது கவனிக்க வேண்டும். மதுரை ஜில்லாவில் சில பாகங்களில் அறுபதாம் கோடை என்ற பயிர் 2 மாதங்களில் அறுவடையாகக் கூடியதுதான். ஆனால் விளைச்சல் ரொம்பவும் கம்மி என்பதற்காக விவசாயிகள் அதைப் பயிரிடுவதில்லை. விவசாய இலாகாவும் அதைப் பரிசீலித்துப் பயிரிடுவதற்கு ஊக்கமளிக்காமலே இருந்து வந்திருக்கிறது. பாக்கி இருப்பவை ராகி, சோளம், கம்பு, வரகு, சாமை போன்ற புஞ்சை தானியங்களே. இவற்றிற்கு கிணற்றுத் தண்ணீர் இருந்தால் மட்டுமே சாகுபடி சாத்தியம்.

நெருக்கடி இவ்வளவு ஆழமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. அக்டோபர் மாதத்துடன் பஞ்சம் போய் விடும் என்ற மனோபாவம் தவறானது, மிகவும் ஆபத்தானது. உலகம் பூராவுமிருக்கும் பஞ்சத்தைப் போக்க 5 வருடத் திட்டம் தேவை என்று நிபுணர்கள் சொல்லி வருகையில் நாம் அக்டோபர் மாதத்தோடு எல்லையை நிர்ணயிப்பது தவறு.

நமது சமுதாயத்திலுள்ள அத்தனை மக்களும், அரசியல் கட்சிகளும்,

R. K. கண்ணன்

தலைவர்களும் சேர்ந்து நீடித்த போராட்டத்திற்குத் தயாரானால்தான் பஞ்சப்பேயை விரட்டிவிட முடியும்.

ரேஷன் வெட்டு!

பிரத்யட்சமாகக் காணக்கூடிய பயங்கரமான நிலைமையை இதோ பாருங்கள். இன்றிருக்கும் 12 அவுன்சு ரேஷனை மேலும் குன்றப்பதா, வேண்டாமா என்று வாதப் பிரதிவாதம் நடந்து கொண்டிருக்கையிலே, மாகாணத்தின் பல பாகங்களில் அந்த 12 அவுன்சு ரேஷன் ஏற்கனவே நடைமுறையில் வெகு தூரத்திற்கு வெட்டப்பட்டு வருவதை பாருங்கள். உதாரணமாக திருநெல்வேலி ஜில்லா கோயில்பட்டி தாலுகாவிலிருந்து நம்மிடம் குவிந்துவரும் செய்திகளைப் படித்தால் அங்கே சட்டப்படி 1/6 பங்கு அரிசியும், பாக்கி 5/6 பங்கு இதர தானியமும் டிப்போவில் அளப்பதற்கு மாறாக, 1/6 பங்கு அரிசி மட்டும் தரப்படுகிறது. பாக்கி 5/6 பங்கு தானியம் தரப்படுவதேயில்லையாம். இன்னும் சேலம், வட ஆற்காடு, ராமநாதபுரம் முதலிய பல ஜில்லாக்களில் மக்களுக்கு ரேஷன் கார்டுபடி வாரா வாரம் தானியம் கிடைப்பதில்லை என்றும் தெரிகிறது. இவற்றிற்கு என்ன அர்த்தம்? உணவு நெருக்கடியும், லஞ்சப் பேயும், கள்ள மார்க்கெட்டும் சேர்ந்துகொண்டு ஏற்கனவே சட்ட விரோதமாக 12 அவுன்சு ரேஷனையும் வெட்டி வருகிறது! உணவுப்பேயின் உண்மைச் சொரூபம் இங்கேதானிருக்கிறது—புள்ளி விவரங்களிலல்ல, வாதப் பிரதிவாதங்களிலல்ல, சட்ட புத்தகங்களிலல்ல. வாழ்க்கையிலேதான், கையிலே கிடைத்து, வாயிலே போடும் அரிசியின் அளவு எவ்வளவு என்பதிலேதான் உணவுப் பஞ்சத்தின் கோரத்தைக் காண முடியும்.

கொள்முதலும், ஜனங்களும்

அப்படியிருக்க இன்னும் 3,36,000 டன் தானியம் கொள்முதல் செய்யப்படவேண்டியிருக்கிறது என்று சர்க்கார் அறிக்கை தெரிவிக்கிறது. இந்த தானியத்தில் ஒரு மணிக்கூட கள்ள மார்க்கெட்டுக்குப் போக விடக்கூடாது! விட்டால், நாம் அழிந்தோம்! சவக்குழியிலிறங்கவேண்டி வரும்!

இந்த தானியத்தை சிறப்பாக கொள்முதல் செய்ய ஒவ்வொரு கிராமத்திலும், தாலுகாவிலும், ஜில்லாவிலும் கமிட்டிகள் அமைப்பது என்று சர்க்கார் முடிவு செய்திருப்பது மிகச் சிறந்த யோசனையாகும். கம்யூனிஸ்ட் கட்சியும், ஆந்திரா, கேரளா, தமிழ் மாகாண விவசாயிகள் சங்கங்களும் ஆரவாரித்து அதை வரவேற்கின்றன. பொதுஜனங்களே கொள்முதலுக்கு பொறுப்பேற்றுக் கொண்டால்தான் தானியம் பொது ஜனங்களிடம் இறுதியில் வந்து சேரும் என்று பல வருடங்களாக நமது கட்சி சொல்லிவந்திருக்கிறது. பொது ஜனங்கள் கையில் அந்த பொறுப்பு விடப்பட்டால் கிராமத்தில் சச்சரவுகள் வளரும் என்றோ, தற்குறிகளான கிராம வாசிகளிடம் அந்தப் பொறுப்பு விடப்படக் கூடாது என்றோ பேசுபவர்கள் நமது ஜனங்களை அவமதிக்கிறார்கள். அவர்கள் ஜனநாயக எதிர்ப்புப் பிண்டங்கள்; மக்களின் ஆக்கல் சக்தியில் நம்பிக்கையின்றி, கூலிக்கும், லஞ்சத்திற்கும் மானங்கெட்டுவாழும் அதிகாரிகளின்மீது பூர்ண பக்தி விசுவாசம் தெரிவிக்கும் மூட்டாள்கள்தான்.

ஜனங்களிடம் பொறுப்பை விடுவது—ஆபத்தில்லை— இதுவரையில் வாராமலிருந்ததுதான் ஆபத்தில் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

எவ்வளவு அதிகமாக கிராம, நகர ஜனங்களிடம் பொறுப்பும், அதிகாரமும் வருகிறதோ அவ்வளவு சீக்கிரமாக, எளிதாக நமது பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

எச்சரிக்கை!

ஆகையால் தான், மந்திரி சபையின் இந்த யோசனையை வரவேற்கும் காலத்திலேயே, ஒரு எச்சரிக்கையும் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வாறு கிராமக் கமிட்டிகளையும், தாலுகா, ஜில்லா கமிட்டிகளையும் அமைக்கும் பொறுப்பை அதிகாரிகள் கையிலே தரப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகள் கிராமத்தில் ‘செல்வாக்குள்ள’ மனிதர்களை கமிட்டிகளில் தான் இஷ்டப்பட்டால் நியமிக்கலாம் என்றும் இருக்கிறது. இது சரியான முறையல்ல. நியமன முறை இருந்தால் அதிகாரிகள்—அவர்களின் குணதிசயங்கள் தான் சந்திசிரிக்க தெரிந்து கிடக்கிறதே—கள்ள மார்க்கெட்காரர்களையும், மொத்த வியாபாரிகளையும், நிலச்சுவான்தாரர்களையும் நியமித்து விடுவார்கள். கிராமத்து ஜனங்களே தங்களுக்கு நம்பிக்கையான நபர்களை தேர்ந்தெடுத்து அனுப்புவதுதான் சிறப்பு.

சர்க்காரின் இந்த நியமனக் கொள்கை அனுபவத்தில் தவறு என்பதை பொதுமக்கள் சுட்டிக்காட்ட முன்வரவேண்டும். கமிட்டிகளில் யார் யார் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை ‘கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு’ பார்த்து ஜனங்கள் கண்காணிக்க வேண்டும். கள்ள மார்க்கெட் வியாபாரிகளோ, பெரிய மிராசுதார்களோ நுழைந்து ஆதிக்கம் செலுத்தினால் விவசாய சங்கங்களும், தொழிற் சங்கங்களும், காங்கிரஸ், லீக் ஊழியர்களும் பலமாகக் கிளர்ச்சி செய்து அவர்களை நீக்கிவிட முயற்சிக்கவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் தேவைக்குப் போக உபரி தானியத்தை சரியாக கணக்கெடுத்து கொள்முதல் செய்வது கமிட்டியின் பொறுப்பு. அங்கங்கே கொள்முதல் செய்யப்படும் உபரி தானியம் கூடியமட்டும் அந்தந்த கிராமத்திலேயே, ஜில்லாவிலேயே பற்றாக்குறை பிரதேசங்களுக்கு அனுப்புவது சிறந்த முறையாகும். அதனால் அனாவசியமாக போக்குவரத்து நெருக்கடி வராது தடுக்கலாம். போக்குவரத்து செலவும் மிச்சப்பட்டு, தானிய விற்பனை விலை உயராதபடி இருக்கும். தரமான நெல்லை கொள்முதல் செய்து, மோசமான அரிசியை ரேஷனாக அதே கிராமத்திற்குத் தரும் ஊழல் நீக்கப்படும் கூட. வினியோகிக்கும்போது, கிராமாந்திரங்களில் நெல்லாகவே விற்பது நல்லது. ரைஸ் மில்லுக்கு கொண்டு போய், திருப்பிக்கொண்டு வருவது மிச்சமாகும். மாட்டுக்கு வேண்டிய தவிடும் கிடைக்கும்.

உணவுப் பெருக்கம்

அடுத்தபடியாக, ரயத்துவாரியிலும், ஜமீன்தாரியிலும் கீழுள்ள தரிசு நிலங்களையும், சர்க்கார் கீழுள்ள தரிசு நிலத்தையும் சாகுபடியின்கீழ் கொண்டுவ[illegible] விவசாயிகளுக்கு—குறிப்பாக [illegible]ல்லாத ஹரிஜன விவசாயிகளுக்[illegible] வாங்கிக் கொடுத்து, பலவண்டியில் உழுபடைகள், எரு [illegible]வரர் மில் வசதிகளையும் தந்து பயி[illegible] மத்தி[illegible] உற்சாகமூட்டினால்தான் [illegible] விட்டு[illegible]திலும் பிழைக்க முடியும். [illegible]பாகாமல்

ஸ்ரீ பாஷ்யம் தஞ்சைபலையாய்[illegible]வுக்கு விஜயம் செய்தபோது தொழிலா[illegible]தாரர்களை சந்தித்துப் பே[illegible] பெண்[illegible]வும், அதிக உணவு உற்பத்[illegible] மார்[illegible]யும்படி அவர்களை மந்திரி அப்பாய்[illegible] கொண்டதாகவும், கம்யூனி[illegible] பற்றியும், விவசாய சங்[illegible] பற்றியும் அப்போது மிரா[illegible] [illegible]மில், [illegible]கள் மந்திரியிடம் புகார் [illegible] கொண்டதாகவும் பத்திரி[illegible] முனிசி[illegible] படித்தோம்.

இந்த மிராசுகள் என்ன முடிவு செய்திருக்கின்றனர் தெரியுமா? தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து நமக்கு வரும் ரிப்போர்டுகளின்படி பார்த்தால் குருவைப் பயிர் அதிகமாகச் செய்வதற்கு புது முயற்சி எதுவும் செய்யாமல் சென்ற வருடம் மாதிரியே பயிர் செய்தால் போதுமென்றிருக்கின்றனர். ஸ்ரீ பாஷ்யத்தின் முறையீடு செவிடன் காதில் சங்கு ஊதின கதையாயிருக்கிறது.

ஸ்ரீமான் பாஷ்யமும் சரி, இதர மந்திரிகளும் சரி உழுது பயிரிடும் சாதாரண விவசாயிகளையும், நிலமில்லா ஏழை விவசாயிகளையும் அண்டினால் அவர்கள் உணவுப் பெருக்குக்காக பல யோசனைகளை சொல்வார்கள், நிறைவேற்றவும் தயாராவார்கள்.

நீர்ப்பாசன வசதிகள் கவனிக்கப்பட வேண்டியதும் முக்கியம். கிணறுகளை வெட்டும் பொறுப்பு சர்க்காரே ஏற்கவேண்டும்; ராணுவத்தை அந்த வேலைக்கு கட்டாயம் அமர்த்த வேண்டும். வேலை சடுதியில் நடந்து முடியும். ஜமீன்தாரி எஸ்டேட்டுகளில் ஏரி, குளம் மராமத்து செய்யப்படாமலிருப்பதை கடுமையாக தண்டிக்கவேண்டும். உடனே பல [illegible]மராமத்து வேலைகளை [illegible]ம கொள்ள வேண்டும். விவசாய ச[illegible]கங்கள் அ[illegible]ங்கே ஒத்தாசை புரிய பின்வாங்காத[illegible] [illegible]வ[illegible]

[illegible]

இறுதிய, கோல்வா[illegible] ஒன்றிருக்கிறது. [illegible]லியவர்களுக்[illegible]க்காரும், பொது [illegible]பாதுக் [illegible] ஒழித்து விடவே [illegible]சலுத்தினர் [illegible] [illegible]ண்டு [illegible]ளர்கள். வீரத் [illegible] குடும்பங்களுக்கு ஜன[illegible] காசு [illegible] பெரி[illegible] [illegible]ன்ஸ்ஏஜ் மூலம் அனுதாபத்[illegible] சுவா[illegible] [illegible]ரிவித்துள்ளார்கள். விய[illegible]

தமிழ்நாடு கிஸான் சபை

3-வது மாகாண மகாநாடு

ஜூன் 7, 8ல் பிரதிநிதிகள் கூட்டம்

9-ம் தேதி மகாநாடு

இடம்: வத்திர[illegible]யிருப்பு, (ராமநா[illegible]புரம் ஜில்லா)

மகாநாட்டு தலைவர்: ஏ. கே. கோபாலன் (கேரள[illegible]

திறப்பாளர்: ப. ஜீவா[illegible]ந்தம்

[illegible]கொடி ஏற்று[illegible] [illegible]மூர்த்தி.

"ரயில்வே ஸ்ட்ரைக்"

இந்த வாரத்தில் தேசத்தின் கவனம் பூராவும் திரண்டுநிற்பது ரயில்வேத் தொழிலாளர்களை நோக்கி. ஜுன் மீ 1-ம் தேதி வேலைநிறுத்த நோட்டீஸ் அந்தந்த ரயில்வே ஜெனரல் மேனேஜருக்கு ரயில்வேத் தொழிலாளர் சங்கங்கள் கொடுத்துவிட்டன. ஜுன் மீ 27-ம் தேதி ரயில்வே வேலைநிறுத்தம் ஏற்படுவது நிச்சயம் என்று தோன்றுகிறது.

ரயில்வே போர்டும், போக்குவரத்து மெம்பர் சர். எட்வர்டு பெந்தாலும், சுறுசுறுப்பாக பத்திரிகை வாயிலாகவும், ரேடியோ மூலமும், வேலைநிறுத்தத்தின் காரணங்களையும், ஆபத்துகளையும் பற்றி பொதுமக்களின் முன்பு பறைசாற்ற ஆரம்பித்து விட்டனர். அவர்கள் பேசுவதைப் பார்த்தால் வேலைநிறுத்தத்தைத் தவிர்க்க தங்களால் இயன்றதையெல்லாம் செய்து விட்டதாகவும் ஆனால் ரயில்வேத் தொழிலாளிகள் முரட்டுப்பிடிவாதமாக வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்திருப்பதாகவும் பொதுமக்கள் நம்பவேண்டுமென்று பிரசாரம் செய்கிறார்கள் என்று தோன்றுகிறது.

சமீபத்தில் புது டில்லியில் ரயில்வேத் தொழிலாளர் தலைவர்களை அழைத்துவைத்து பிரதம லேபர் கமிஷனர் சமரசமுயற்சிகள் நடத்தினார். 26-ம் தேதியிலிருந்து 30-ம் தேதிவரை பேச்சுவார்த்தைகள் நடந்தன. சம்பள உயர்வு, பஞ்சப்படி, போனஸ், ஆள்குறைப்பு ஆகிய பிரச்னைகளில் உடனடியாக நிறைவேற்றவேண்டிய குறைந்தபக்ஷ கோரிக்கைகளை தொழிலாளர் தலைவர்கள் சமர்ப்பித்துள்ளனர். அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைப்படி, இந்த வருடத்தில் 30 கோடி ரூபாயும், அடுத்துவரும் வருடங்களில் 20 கோடி ரூபாயும் அதிகப்படி செலவாகும் என்று கூறப்படுகிறது. தங்களுடைய கோரிக்கைகளை சரிபாதியாகக் குறைத்துக்கொண்டு விட்டனர்.

இதற்கு பதிலாக ரயில்வே போர்டார் வாக்களிக்கும் திட்டமும் பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கின்றன. 16 ரூபாய்க்கு குறைந்த சம்பளம் பெறுபவர்களுக்கு உடனே ரூ. 16 ஆக உயர்த்துவதாகச் சொல்லுகின்றனர். இதன் மூலம் சுமார் 3,50,000 பேர்களுக்கு அனுகூலம் ஏற்படுமென்கின்றனர். மொத்த செலவு ரூ. 1 கோடி ஆகுமென்று எதிர்பார்க்கின்றனர்.

ஏனையவர்களுக்கு தற்சமயம் கொடுக்கப்படும் ரொக்கப் பஞ்சப்படியை சம்பளத்துடன் சேர்த்துவிடுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு அளவு உண்டு, சம்பளத்தில் பாதிக்கு மேற்பட்டு விடக்கூடாது. இந்தத் திட்டத்தின்படி உடனடியான ரொக்க அனுகூலம் ஒன்றும் கிடையாது.

மாதச் சம்பளக்காரர்களுக்கு ரூ. 80-க்குட்பட்ட எல்லா கிரேடுகளையும் ஒன்றாக சேர்த்துவிடு... இதன்மூலம் வருடம் ஒன்றுக்கு அரைக் கோடி ரூபாய் ...ம்.

3½ லக்ஷம் பேர்களுக்கு தலை... செலவு ஏற்படு... லாம். இதைத் தவிர உடனடியாக யாருக்கு... க்கு ரூ. 2 அதிகப்ப... அனுகூலமும் கொடுக்கத் தயாராக இல்லை... ம எந்தவித ரொக்க அ...

அடிப்படையான எல்... ரயில்வே போர்டு... க்கு விட மறுத்துவிட்டு... லாப் பிரச்னைகளையும் அட்ஜுடிகேஷனு செய்யவேண்டிய அவசி... , தாற்காலிகமாக என்ன அனுகூலங்கள் மானல் ப... சீலனைசெய்... சிய மிருக்கிறது என்பதைப்பற்றி வேண்டு ரயில்... போர்டு கூ... டிய ஒரு அட்ஜுடிகேட்டரை நியமிப்பதாக ...பேறுத்த... றுகிறது. இந்த யோசனையைத் தொழிலாளர் ...ள் ப... சமத... து நியாயம்.

...வே ... ச முயற்சிகளெல்லாம் முறிந்தன. ரயில்வே ... தவிர்க்கமுடியாதது. ரயில்வே போர்டும் இந்திய அர... ம் பயத்தின் காரணமாக பொய்ப் பிரசாரத்தில் இறங்கி ...றனர். அவர்கள் கூறும் ஆட்சேபனைகளில் முக்கிய ... பணமில்லை, ரயில்வே கட்டணத்தை உயர்த்த நேரிடுமென் ... மது பொதுமக்களிடத்தும், மூன்றாவது வகுப்புப் பிரயாணி ...தும் முதலைக் கண்ணீர் வடிக்கிறார் பெந்தால் துரை. முதலில் ...சால்ல விரும்புவது இது முதல் நெம்பர் ஹம்பக். ஸ்ட்ரைக் ...் அதை உடைப்பதற்கு இரகசிய திட்டம் போட்டிருக்கிறார் ...அதற்கு எத்தனை கோடி செலவாகும்? அந்தப் பணத்தை இப்பொழுது தொழிலாளிகள் கையில் கொடுத்தால், ...க்கையும் தவிர்க்க முடியும், பொதுமக்களையும் காப்பாற்ற ... பணமில்லை யென்று ஓலமிடுவது சுத்தப் பொய். தேய் ... நிதியில் ரூ. 100 கோடி இருக்கிறது. இயந்திரங்கள் ...துபோனால் புதிப்பிப்பதற்காக ஏற்பட்டது இந்த நிதி. இந் ...தய்மான நிதியில் அவசியத்திற்கு அதிகமாக ரூ. 50 கோடி பதுக்கி... வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் ஒரு பகுதியை உழைத்து ஓடாகிறானே மனிதன், அவனைக் காப்பாற்ற உபயோகிப்பது நேர்மை.

"ரயில்வே ரிசர்வ்" நிதி என்று ஒரு ரூ. 17 கோடி இன்னொரு மூலையில் பதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

1924-ம் வருஷத்தில் அசெம்பளியில் நிறைவேறிய தீர்மானப்படி ரயில்வே வருமானத்திலிருந்து இந்திய அரசாங்கத்தின் பொது நிதிக்கு வருடமொன்றிற்கு சுமார் ரூ. 7 கோடிதான் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் யுத்தம் நடந்த 6 வருடத்தில் மட்டும் ரூ. 158 கோடி ரயில்வே வருமானத்திலிருந்து பொது நிதிக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் பெந்தால், இந்தத் தொகையைத் திரும்பிக் கொடுத்து மூன்றாம் வகுப்புக் கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடு செய்தால் யோக்கியப்பொறுப்பாகும். ஆனால் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கும் நாமத்தைப் போட்டுவிட்டு, ரயில்வேத் தொழிலாளிகளையும் வயிற்றிலடித்துவிட்டு, பெரிய சமாராதனை நடத்துகிறது இந்திய அரசாங்கம் அமிதலாப வரியை அவசர அவசரமாக ரத்து செய்திருக்கின்றனர். கொள்ளைலாபமடிக்கும் இந்திய முதலாளிகளுக்கு இந்த சலுகையைக் காட்டி, தொழிலாளவர்க்கத்தையும் பொதுமக்களையும், தாக்க அவர்களது தயவை சம்பாதிக்கும் மோசடி இது.

ராணுவத் தேவைக்காக சென்ற போக்குவரத்திற்கெல்லாம், அரை வாசிக்கும் குறைவாக கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

ரயில்வே கட்டணம் விதிக்கும் கொள்கையை ஆராய்ந்தால், ஏகாதிபத்ய மோசடி பூராவும் அம்பலமாகும். பிரிட்டனுக்கு வெளியேறும் சாமான்களுக்கு மிக மலிவான ரேட்டு. பாரி, ஸ்பென்ஸர் போன்ற வெள்ளைக்கார கம்பெனிகளுக்கு விசேஷ சலுகை. இந்த அநியாயச் சலுகைகளை ரத்து செய்தால் ரயில்வே வருமானமும் அதிகரிக்கும், உள் நாட்டு வர்த்தகமும் கைத்தொழிலும் செழிக்கும்.

இதற்கெல்லாம் மகுடம் ... போலிருக்கும் ஆச்சர்யமென்னவென்... ல், ரயில்வேத் தொழிலாளர்களு...க்கு மட்டும தனி சலு... காட்டக்கூடாதாம்! என்ன நியாய புத்... பாக்கி ஊழியர்களிடத்தில் என்ன பாரபக்ஷமற்ற அன்பு! உண்மை யென்... ? ரயில்வேத் தொழிலாளர்களை இன்று மண்டையிலடித்து விட்டால் நா... எல்லா ஊழியர்களையும் வயிற்றிலடிக்கல... ம் வாழ்க்கைக்குப் போதிய ச... ம், பஞ்சம் போக்குதல், வேலையில்லாத் ... திண்டாட்டத்தை தவிர்த்... யுத்த பிற்கால பிரச்னைகளைசமாளிப்ப... தில், இந்திய மக்களின்... காட்டிலும், பிரிட்டிஷ் ஏகா... த்ய நலன்... தான் நேரடியாக... கவும், இந்திய அரசாங்...த்தின் கொள்...கையில் முதலிடம்... ந்தக கொள்கைதான் வேலைநிறுத்தம்... க்குக் காரண...

...த் தொழிலாளர்கள் இன்... எதிர்த்துப் போ... சத்தையும், வேலை... போர். இதர ... லா மக்களும்...

காஷ்மீர் மக்களின் ... போராட்ட...

பி. ஸி. ஜோஷியின் அறிக்கை

காஷ்மீர் மக்களின் போராட்டத்தைக் குறித்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுக்காரியதரிசி தோழர் பி. ஸி. ஜோஷி விடுத்திருக்கும் அறிக்கையைக் கீழே தருகிறோம்.

பிரிட்டிஷ் மந்திரிகளின் தூது கோஷ்டி கொடுத்திருக்கும் போலி இந்திய சுதந்திரத் திட்டத்தில், இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கு மட்டும்தான் பரிபூரண சுதந்திரத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. சமஸ்தான பொது ஜனங்கள் பரிபூரணமாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டனர். தங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் பிரதான இந்தியத் தலைவர்களைத் தீவிரமாக ஈடுபடும்படிசெய்துவிட்டால், முன்னேற்ற மடையாது "பின்தங்கி நிற்கும்" சமஸ்தான மக்களைப்பற்றிய நினைவுகளெல்லாம் மறக்கப்பட்டுவிடும் என்று அவர்கள் தங்கள் மனதிற்குள் திட்டமிட்டுக் கொண்டனர்.

யாரிடம் வாஸ்தவத்தில் பேசவேண்டுமோ—அதாவது ஒடுக்கப்பட்ட மக்கள்—அவர்களிடம் பேசாமலே,—அவர்கள் இல்லாமலே—தங்களுடைய காரியத்தை சாதித்துக் கொள்ள முற்பட்டுவிட்டனர்.

தங்களுடைய சொந்த தேசிய மகாநாட்டின் கொடியின் கீழும், ஷேக் அப்துல்லாவின் உணர்ச்சியூட்டும்படியான தலைமைப் பதவியின் கீழும் திரண்டு ஒன்றுபட்டு நிற்கும் காஷ்மீர் தேசத்துப் பொதுமக்கள், "காஷ்மீரை விட்டு வெளியேறு!" என்ற ஸ்லோகத்தை முன்வைத்தனர். அதன் அடிப்படையில் ஆயிரமாயிரமாகத் திரள்வதற்கு ஆரம்பித்தனர். "இந்தியாவைவிட்டு வெளியேறு" என்ற ஸ்லோகத்திற்கு தங்களுடைய பிரிட்டிஷ் எஜமானர் என்ன பதிலைக் கொடுத்தார்களோ, அதே பதிலை பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ...ல் தாங்கி நிறுத்தப்பட்டிவாதிகள்... எதேச்சாதிகாரிருக்கும் சமஸ்தான... 1942-... யும் கொடுத்திருக்கிறான். ... வருடத்திய பயங்கர ஆட்சியின் கொடூர காட்சிகள், 1946ம் வருடத்தில் காஷ்மீர் தேசத்தில் மீண்டும் நடித்துக் காட்டப்படுகிறது.

பூச்சாண்டி பலிக்கவில்லை

கம்யூனிஸ்டு பூச்சாண்டியைக் காட்டுவது என்ற புதிய தந்திரத்தையும் காஷ்மீர் நிர்வாகம் கையாண்டிருக்கிறது. இது பலிக்கவில்லை. ஏனெனில், காஷ்மீர் தேசத்துக் கம்யூனிஸ்டுகள் ஜனங்களின் மரியாதைக்கு பாத்திரமானவர்கள்; ஜனங்களின் பொதுவான தேசீய இயக்கத்தில் மிகவும் மதிக்கப்படுகிறவர்கள்.

பயங்கர ஆட்சியை எதிர்த்து வீரதீரத்துடன் பொதுமக்கள் தலைநிமிர்ந்து நின்று போராடுகிறார்கள் என்று கூறுகின்றன கடைசியாக வந்திருக்கும் செய்திகள். சிர்குலைவுக்காரர்கள் வெற்றி யடைவதற்கு பதில், மேலும் மேலும் அதிகமாக அப்பொதுஜன இயக்கத்திற்கு ஆதரவு திரண்டு வருகிறது. கிராம புறங்களிலிருந்து மேலும் மேலும் அதிகமாக ஆதரவு திரளுகிறபோது, காஷ்மீர் முஸ்லிம் மகாநாட்டைச் சேர்ந்தவர்களிடையே யிருந்தும், காஷ்மீர் பண்டிதர்களிடையே யிருந்தும் அநேகமானவர்கள் அவ்வியக்கத்திற்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.

சமஸ்தானப் பொது மக்களின் இயக்கங்களிலெல்லாம் மிகவும் முன்னேற்றமடைந்து, ஒன்றுபட்டிருக்கும் இயக்கங்களில் ஒன்று காஷ்மீர் பொது மக்களின் இயக்கம். அவர்கள் போராடுவார்கள்; கொஞ்சமும் தயங்கமாட்டார்கள்! அவர்கள்விடாமல் போராடுவார்கள்; சரணடையமாட்டார்கள்!

அவர்களுடைய போராட்டத்தில் அவர்களுடன் ஒன்றுபட்டு நிற்பதாகவும், அவர்களுடைய லக்ஷியத்திற்குப் பரிபூர்ண ஆதரவு தருவதாகவும் தெரிவித்து சுதந்திரத்தை நேசிக்கும் அவர்களுடைய சகோதர மக்களிடமிருந்து—இந்தியாவின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம்—அவர்களுக்கு செய்திகள் கிட்டுமேயானால், இப்போது போராடுவதைவிட இன்னும் திறமையாகவும், இன்னும் உறுதியாகவும் அவர்கள் போராடுவார்கள்.

நம்மிருவருக்கும் பொதுவான போராட்டம்

காஷ்மீர் மக்களின் போராட்டம் காஷ்மீரின் போராட்டம் மட்டுமல்ல. பெரிய போராட்டத்திலே முதன் முதலாகச் சுடப்பட்டிருக்கும் வேட்டு அது! மத்தியக் காலப் பிற்போக்கு எதேச்சாதிகாரிகளான சமஸ்தானாதிபதிகளிடம்—584 பேரிடம்—அடிமைகளாக வைக்கப்பட்டிருக்கும் 9 கோடியே 30 லக்ஷம் பிரஜைகள், தங்களுடைய பிரஜா உரிமைகளுக்காகவும், பொறுப்பாட்சிக்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும் தொடுக்கும் போராட்டத்தில் சுடப்பட்டிருக்கும் முதல் குண்டே அது! இப்போராட்டத்தில் அவர்கள் வெற்றிபெற்று சட்ட திட்டங்களை வகுக்கப் புதிதா... அமைக்கப்படும் ஸ்தாபனத்தில் ... களுடைய ஐந்தாம் படைகள்... சமஸ்தானாதிபதிகளை உபயோகி... தற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்யவா... கள் போட்டிருக்கும் திட்டம் முழுதும் சீர்குலைந்துவிடும். அதோடு, ... தேசத்தில் மூன்றிலொரு பகுதி... லிருந்து கொண்டு துர்நாற்றம் வீசி... கொண்டிருக்கிற நிலப்பிரபுத்வ... பிண்டங்கள் முழுவதும் வழித்தெ... யப்பட்டு விடும்.

நமக்குள் பல்வேறுபட்டப் பிர...னைகளில் எத்தகைய அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும், காஷ்மீர் தேசத்துப் பொதுமக்களின் மகத்தானப் போராட்டத்தை ஆ...ரிப்பதற்கு நாமெல்லோரும் ஒன்... சேர்ந்து நிற்க முன் வரவேண்டும் என்று எல்லா அரசிய... கட்சிகளையும், எல்லா தேச பக்த...களையும், எல்லா அறிவாளிகளையும் உழைப்பாளிகளின் சகல ஸ்தா...னங்களையும் கம்யூனிஸ்டு கட்... வேண்டிக் கொள்கிறது. அவர்...ளுடன் ஒன்றுபட்டு நிற்பதற்கும் பொதுவான லக்ஷியத்தில் அவர்...ளுக்கு உதவி புரிவதற்கும், நமக்குள்ளிருக்கும் வேற்றுமைகளை மறந்து நாம் முன் வருவதனால், நம்மை... நாம் பெருமைப்படுத்திக் கொள்...றோம்.

இந்தியாவை விட்டு வெளியேறு!
காஷ்மீரை விட்டு வெளியேறு!
காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே!

ஜுன் 9-ந்தேதி
"சமஸ்தான பொதுமக்கள் தினம்"

வருகிற 9-ந்தேதியை இந்திய சமஸ்தான பொதுமக்களின் தினமாக தமிழ்நா... ங்குமுள்ள கம்யூனிஸ்டு கட்சி யூனிட்டுகள் கொண்டாடவேண்டுமென்று ... மாகாணக் கமிட்டி கேட்டுக்கொள்கிறது. சமஸ்தான மக்களின் உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கும் ஒவ்வொரு தேசபக்தனையும், தேசபக்தியுள்ள ஒவ்வொரு ஸ்தாபனத்தையும் இக்கிளர்ச்சியில் கலந்துகொள்ளும்படி நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.

சமஸ்தான எதேச்சாதிகாரம் ஒழிக!
சமஸ்தான மக்களைத் தொடாதே!
அடக்குமுறை ஆட்சி அடியோடு ஒழிக!
அரசியல் நிர்ணய சபைக்கு மக்கள் பிரதிநிதிகளே!
பிரஜா உரிமைகளை வழங்கு!
பொறுப்பாட்சியை வழங்கு!
சுயநிர்ணய உரிமை வழங்கு!

அரசியல் நிர்ணய சபையில் ஐந்தாம் படைக்கு இடமில்லை!

சமஸ்தான மக்கள் இயக்கம் ஓங்குக!
சமஸ்தான மக்கள் ஒற்றுமை ஓங்குக!

தமிழ்மாகாண கமிட்டி,
இந்திய கம்யூனிஸ்டு கட்சி.

லஞ்சப் பழக்கம்

(முதற் பக்க தொடர்ச்சி)

இரண்டாவது முறை, ஏழை எளிய மக்கள் தங்களுக்கு ஆகவேண்டிய காரியத்தை யுத்தேசித்து அதிகாரிகளை நெருங்கும்போது, அந்த அதிகாரிகளே அவர்களை இழுத்தடித்து, உருட்டி மிரட்டி லஞ்சம் கொடுக்க நிர்ப்பந்தப்படுத்திப் பெறுதல். இது உண்மைதான் என்று சகல ஜனங்களும் ஒப்புக் கொள்வார்கள். ஏனோ இந்த உண்மை கனம் மந்திரி ஸ்ரீ பாஷ்யத்திற்கு தெரியவில்லை. அவர் சுற்றுப் பிரயாணத்தின் போது ஓரிடத்தில் கூறினார். லஞ்சம் வாங்கும் அதிகாரியைவிட, "லஞ்சம் கொடுக்கும் ஜனங்கள்தான் மிகப் பெரிய குற்றவாளிகள். குறைந்த சம்பளம் இருப்பதால்தான் அதிகாரிகள் அவ்வாறு செய்யநேரிடுகிறது. ஆனால் ஜனங்கள் ஏன் அவ்வாறு லஞ்சம் கொடுக்கவேண்டும்? இவர்களைத்தான் தண்டிக்கவேண்டும்" என்றார். வேடிக்கையான வாதம் இது! லஞ்சம் கொடுப்பதை ஜனங்கள் மனமாற வெறுக்கிறார்கள். அது பணக்காரக் கும்பலும் அதிகாரத் திமிரும் சேர்ந்து ...கும் காசு! லஞ்சத்தில் இற... அதிகாரிகளை தாட்சண்ய... உடனே வேலையை விட்டு... சிறைக்கனுப்புவதோடு மட்டு... அவரது சொத்தையும் ... செய்திடவேண்டும். கே...

...துக்கொடுத்தும் அதைக் கவனியாமலே விருக்கும் இதர பெரிய திமிங்கலங்களையும் பாதாளத்திற்கு அனுப்பவேண்டியதே. இதைப்பற்றி ஆதாரங்களுடன் அடிக்கடி 'ஜனசக்தி'யில் எழுதி வந்துள்ளோம்.

மக்களின் பொறுப்பு

இறுதியாக, மந்திரி சபையின் கொள முதல் திட்டத்தை நடைமுறையில் 100-க்கு 100 பங்கு வெற்றிகரமாக சாதிக்க நமது விவசாய மக்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொள்ள வேண்டும். கிராமக் கமிட்டிகளில் உண்மையான பொதுஜன ஊழியர்களும் அரசியல் ஊழியர்களும் தலைமை வகிக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கமிட்டியையும் ஆதரித்து பொதுக் கூட்டங்கள் கூட்டி கமிட்டிகளிடம் ஜனங்களின் கோரிக்கைகளையும், நிர்மாண பூர்வமான யோசனைகளையும் சமர்ப்பிக்க வேண்டும். கள்ளமார்க்கெட் ஒழிக! என்று கோஷிப்பதோடல்லாமல் கையும் மெய்யுமாய்ப் பிடித்து தண்டிக்க உணவுக் கமிட்டிகளின்கீழ் ... பிரக்ஞைக்கான தொண்டர்கள் ...குத்து நிற்கத் ... ம்.

...வுக் கமிட்டிகள் ஓங்குக!
...ள மார்க்கெட் ஒழிக!!

படித்துப் பார்!

எல்லோருக்கும் உணவு
(ஜி. அதிகாரி எழுதியது)
விலை அணா 5.

பி. ஸ்ரீனிவாசராவ் எழுதிய
பஞ்சம் போக்க உடனடி நடவடிக்கை — அணா 2

கம்யூனிஸ்டு கட்சியும் விவசாயிகளும் — அணா 3

ஜனசக்தி பிரசுராலயம்,
1/6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை.

விக்கிரமசிங்கபுரத்தில் அமைதி நிலவ

...ர்மையான சங்கத்தை அங்கீகரி

...ஸ்டாண்டிங் ஆர்டர் ஒழிக

*விக்ரமசிங்கபுரம் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கப்
பொதுக் காரியதரிசியும், மாகாணத் தொழிற்சங்க காங்கிரஸ்
காரியக் கமிட்டி மெம்பருமான தோழர் மீனுக்ஷிநாதனையும்,
தோழர்கள் நல்லசிவன், ஸ்ரீனிவாசன் உட்பட மற்றும் பலரை
யும் போலீஸ் அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்கள்.*

...ில் முதலாளி டோக் துரைக்கு
கங்காணிகளாக விருக்கும்
...யுடு சங்க ரௌடிகளின் வெட்டுக்
...த்து அட்டூழியங்களுக்கு ஓர் முடிவு
...ற்பட்டால்தான். விக்ரமசிங்கபுரத்
...ல் அமைதி நிலவும். முதலாளி
...ன் இஷ்டப்படி ரௌடிகளுக்குப்
...துகாப்பு கொடுத்து தொழிற்சங்க
...ழியர்களை சதா துன்புறுத்தி
...ரின் அமைதியைக் கெடுத்துக்
...காண்டிருக்கிற சர்க்கிள் இன்ஸ்
...க்டர் ராமா ராவை இவ்வூரை
...ட்டுக் கிளப்பினால்தான் ஊர்
...மைதிப்படும். தொழிலாளர்களால்
...கவிடப்பட்டு பிணமாகி விட்ட
...யுடு சங்கத்தை அங்கீகரிப்பதை
...ம், தொழிற்சங்க ஊழியர்களைப்
...ழி வாங்குவதையும் விட்டுவிட்டு,
...தாழிலாளிகளின் பூரண விசுவா
...த்தைப் பெற்று பலம் பெற்றுள்ள
...ஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தை
...ங்கீகரித்து தொழிலாளிகளின்
...காரிக்கைகளைத் தீர்க்க முதலாளி
...ன்வந்தால்தான் அமைதி ஏற்படும்.

இரண்டு யூனியன்கள்

...தொழிற் சங்கப் பணத்தை பல்
...ாயிரக் கணக்கில் மோசடி செய்த
...ற்றத்திற்காக, 3 கோர்ட்டுகளிலும்
...மாசகாரப் பட்டம் பெற்று ஜெயி
...க்குப் போயிருக்கும் S. R. வரத
...ராஜுலு நாயுடுவின் தலைமையில்,
...938-ல் ஓர் சங்கம் அமைக்கப்பட்
...து. இச்சங்கத்தின் முக்கிய வேலை,
...சொந்தக்காரர்களுக்கும் லஞ்சம்
...கொடுப்பவர்களுக்கும் வேலை வாங்
...கித் தருவதும், தொழிலாளர்களின்
...வர்க்க உணர்ச்சியை மழுங்க அடி
...த்து, அரசியல் பொருளாதாரக்
...கோரிக்கைகளுக்காக போராட்டம்
...டத்தாமல் முதலாளியின் இஷ்டத்
...தைப் பூர்த்தி செய்வதும், சங்கத்தில்
...சேர வருகிற தொழிலாளிகளிட
...மிருந்து 1938-ம் வருஷம் முதல் சந்
...தாப் பணமும் போனஸ் நிதியும்,
...அபராதத் தொகைகளும் வசூலித்
...துப் பிடுங்கித் தின்னுவதும்தான்
இதன் கொள்கைகள். மேலும் யுத்த
நிதி வசூலிப்பது, போனஸ் முழு
வதையும் ஒரே யடியாகக் கொடுக்க
மானேஜ்மெண்டு மறுத்தால் அதை
ஆதரிப்பது, தொழிலாளர்கள் தம்
கோரிக்கைகளைக் கேட்க ஆரம்பிக்
கிறபோது ரௌடிகளை ஏவி அடிப்
பது ஆகியவைகளே இச்சங்கத்தின்
சாதனைகள்.

இந்தச் சங்கம் தொழிற் சங்கமா
யில்லாமல், கங்காணி சங்கமாக
மாறிய பிறகு, செங்கொடியின்கீழ்
பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்
தோன்றியது,

கரியில்லையென்று முதலாளி மில்லை
மூடிய காலத்தில், இச்சங்கத்தைச்
சேர்ந்த தொழிலாளர்கள் வண்டி
மாடுகளுடன் மலைக்குச் சென்று
மரங்களை வெட்டி விறகு கொண்டு
வந்து மில்லை ஓட்டி நூல் பஞ்சத்
தைப் போக்கினார்கள். மக்களின்
மானத்தைக் காத்தார்கள். சோஷ
லிஸ போதத்தை யளித்து தொழிற்
சங்கத் தலைவர்களைத் தயாரிக்கவும்
செய்தது. போராட்டங்களை நடத்தி
உரிமைகளைப் பெற்றது.

இந்த சங்கம் வளர்ந்தால், தன்
கங்காணி சங்கம் மறைந்தால்,
கோடிக்கணக்கில் கொள்ளை லாப
மடிக்க முடியாதே, தொழிலாளர்
களுக்கு விட்டுக் கொடுக்க நேருமே
என அலறுகிறது வெள்ளை முத
லாளித்வம். அதனால் எப்படியும்
செங்கொடிச் சங்கத்தை ஒழித்தே
தீருவது என்ற வெறியில் நாயுடு
சங்க ரௌடிகளை ஏவி கலகம் விளை
விப்பதிலும், சமாதானத்தை நிலை
நாட்ட அவதார மெடுத்திருக்கும்
போலீசை தன் ஜேபியில் போட்டுக்
கொண்டு சர்வ சதா அமளி விளை
விப்பதிலும் முனைந்திருக்கிறது.

ரௌடிகளின் அட்டூழியங்களைப்
பற்றி எழுத்துமூலம் தெரிவித்தா
லும் போலீஸ் தலையிடுவதில்லை.
அதுமட்டுமல்லாமல் தொழிற் சங்
கத்தை பல தடவை போலீஸ் தாக்கி
யிருக்கிறது. சர்க்கார் இதைப்
பார்த்துக்கொண்டு மௌனமாக
ஆனந்திக்கிறது.

முதலாளி, ரௌடி, போலீஸ்
இவர்கள் கையில், சர்க்கார் ஊரை
ஒப்படைத்திருப்பதால்தான் இத்
தனை அமளிகள் நடக்கின்றன.
விக்கிரமசிங்கபுர ஜனத்தொகையில்
மிகப் பெரும்பாலோர் தொழிலா
ளர்களின் குடும்பங்கள்தான். இவர்
களின் அன்பைப் பெற்ற கொடி,
செங்கொடி. அதை ரௌடிகள்
இறக்கினால் தொழிலாளிகள் பார்த்
துக்கொண்டிருக்க மாட்டார்கள்.
அப்போதுதான் தகராறு ஏற்படு
கிறது. அமைதி குலைகிறது. ஒவ்
வொரு குடும்பத்திலும் அமைதி
குலைகிறது. கொடியை இறக்க
ரௌடிகள் புறப்பட்டால், அது
கொடியை இறக்கவல்ல. ஊரின்
அமைதியைக் கெடுக்க.

ஸ்டாண்டிங் ஆர்டர்மூலம் தொழி
லாளர்களுக்கு விரோதமான கங்
காணி சங்கத்தை முதலாளி ஆதரிப்
பதாலும், போலீசின் பாரபட்சத்
தாலும்தான் ஊரின் அமைதி குலை
கிறது. ஊரின் அமைதி நிலவ
உண்மையான தொழிற் சங்கத்தை
அங்கீகரிக்கவேண்டு மென்பதை
பொதுமக்களும் ஏனைய கட்சியின
ரும் உணரவேண்டும்.

தோழர் அப்பாயின் கோர மரணம்

கோவை முதலாளிகளின் கொலைகாரத்தனம்

*செங்கொடித் தோழர் அப்பாய் முதலாளிகளின் கையாட்களால் சிங்காநல்லூரில் கொலை
செய்யப்பட்டார். தோழர் அப்பாயை ரோட்டில் இழுத்துப் போட்டு வெட்டினார்கள் ரௌடி
கள். முகத்தில், கண்ணுக்குக் கீழே கடவாயையும் கன்னத்தையும் சேர்த்து வெட்டிப் பிளந்
தார்கள் சண்டாளர்கள். விலா எலும்பையும் வெட்டி நொறுக்கினார்கள். ஈரக்குலையையும்
அறுத்துவிட்டார்கள். அன்றே அவருடைய ஆவி செங்கொடிக்கு வணக்கம் செய்துவிட்டுப்
பிரிந்தது. முதலாளித்துவ ஓநாய்களின் ரத்த வெறிக்கு தொழிலாளி வர்க்கத்தின் உத்தம புத்தி
ரன் இரையானான்.*

**அன்று கோவை நகரத்திலுள்ள தொழிலாளி மக்கள் அத்
தனை பேரும், லக்ஷக்கணக்கான பொதுமக்களும் "முதலாளிப்
பேய்களை ஒழிப்போம்" என்று ரணகர்ஜனை செய்தார்கள். ஆத்
திரத்தால அவர்களின் கண்கள் சிவந்து ஜொலித்தன. பல்லா
யிரக்கணக்கான தொழிலாளித் தாய்கள் மார்பில் அடித்துக்
கொண்டு அழுதார்கள். "முதலாளி ஒழிக" என மண்ணை
வாரித் தூற்றி சாபமிட்டார்கள்.**

தோழர் அப்பாய் காளீஸ்வரர்
மில் தொழிலாளி. கம்யூ
னிஸ்டு கட்சியின் முக்கிய ஊழியர்.
தொழிலாளிகளின் அன்பைப் பெற்
றவர். 22-5-46-ல் மாலை 6 மணிக்கு
அப்பாயும் அவருடன் ரங்கையன்,
ரங்கசாமி என்ற காளீஸ்வர மில்
தொழிலாளிகள் இருவரும் சிங்கா
நல்லூரிலுள்ள மில் தொழிலாளர்
சங்கத்துக்குப் போய்க்கொண்டிருக்
கும்போது ராஜலக்ஷ்மி மில்லுக்கு
அருகில் ஐயோ என்ற அலறல்
கேட்டது. என்னவென்று பார்க்க
ஓடினார்கள். உடனே ஒரு ரௌடிக்
கும்பல் அவர்கள்மீது பாய்ந்தது.
தோழர் ரங்கையனை வெட்ட முயற்
சித்தார்கள். தோழர் ரங்கசாமியை
மரத்தில் கட்டி வைத்து அடித்தார்
கள். தோழர் அப்பாயை படு
கொலை செய்தார்கள்.

தாக்கியது யார்.

கொலை செய்யும்படி ரௌடிகளை
ஏவி விட்டவர்கள் முதலாளிகள்.
சட்ட சபைத் தேர்தலில் தோழர் பி.
ராமமூர்த்தியைத் தோற்கடிக்க
கோவை முதலாளிகள் பண்ணிய
கொடுமைகளுக்கு கணக்கு வழக்
கில்லை. பணமும் பழிவாங்குதலும்,
பயமுறுத்தலும் மண்டை உடைத்த
லும் பகிரங்க நிகழ்ச்சிகளாயின:
எல்லாவற்றிற்கும் மேலாக, காங்
கிரஸ்காரர்களுக்கும், கம்யூனிஸ்டு
களுக்குமிருந்த அபிப்பிராய பேதத்
தை தங்களுக்குச்சாதகமாகப் பயன்
படுத்திக் கொண்டார்கள் இந்த முத
லாளிகள். கம்யூனிஸ்டு அபாயத்தி
லிருந்து காங்கிரஸைக் காப்பதாகக்
கூறினார்கள். காங்கிரஸ் வாதிகள்
தெளிவும் உறுதியுமில்லாம லிருந்த
அச்சமயத்தில் காங்கிரஸ் தேர்தல்
யந்திரத்தையே கைப்பற்றினார்கள்
முதலாளிகள். ராமமூர்த்தியைத்
தோற்கடிக்கவும் செய்தார்கள்.

அப்பாயைக் கொலை செய்வ
தற்குமுன் 19-5-46-ல் ராஜலக்ஷ்மி
மில் தொழிலாளியும் மில் தொழி
லாளர் சங்க உபதலைவருமான
தோழர் யு. வி. ரங்கா கத்தியால்
குத்தப்பட்டார். குத்தினவன்
வெள்ளலூர் வெங்கட்ராமன் என்ற
ரௌடி. கள்ளி மடையைச் சேர்ந்த
காரமடை என்ற ரௌடியும் இதில்
பங்கு கொண்டானாம். இன்னும்
கத்திக்குத்துகளும் கல்லடிகளும்
தொடர்ந்து நடைபெற்றுள்ளன.
இதே தோழர் ரங்கா இரவில் படுத்
துத் தூங்கும்போது அவரது தலை
யில் கல்லைப் போடவும் முயற்சி
நடந்திருக்கிறது. கம்யூனிஸ்டுகளைக்
கண்ட கண்ட விடமெல்லாம்
வெட்டி வீழ்த்தவேண்டு மென்று
ஆறுகுட்டி, ராமராஜ் என்பவர்கள்
பேசினார்கள். இவர்கள் அனைவ
ரும் சிங்காநல்லூர் பஞ்சாலைத்
தொழிலாளர் சங்கத்தின் இன்றைய
நிர்வாகத்தின் தயாரிப்புகள். இவர்
களில் ரங்காவைக் குத்திக் கொல்ல
முயற்சித்தவர்கள் இருவரும் ஜனங்
களுக்கெதிராகக் குற்றம் புரிந்து
ஜெயிலுக்குப் போன கேடிகள்,
பஞ்சாலைத் தொழிலாளர் சங்க நிர்
வாகத்தினரின் ஆத்திரமூட்டும் பிர
சங்கங்களும், அவர்களின் தயா
ரிப்புகளும்தான் ரௌடிகளைக்
கொலை முயற்சியில் இறக்கி, முத
லாளிகளுக்கு பேருதவி யளிக்கி
றது.

தேர்தல் முடிந்த பிறகும் கொலை நடப்பது ஏன்?

இன்று கொலைகாரன்களை ஏவி
விடுகிறார்கள் முதலாளிகள். காரண
மென்ன? இன்று தேசம் பூராவும்
துணிப் பஞ்சத்தால் மானமிழந்து
வருகிறது. உடுக்க உடை வேண்டு
மென்ற பொது மக்களின் கிளர்ச்சி
தினே தினே வலுத்து வருகிறது.
முன்போல முதலாளிகளால் கள்ள
மார்க்கெட் நடத்த முடியாது; கொ
ள்ளை லாபம் அடிக்க முடியாது;
திருட்டுத்தனம் செய்ய முடியாது.
ஏனென்றால் பஞ்சத்தின் கோரம்
அதிகம். அதை எதிர்க்க ஒன்று
படும் ஜனசக்தி அதிகம். ஜனங்களின்
கோ... ...க்கும் கிளர்ச்சிக்கும் ஒத்
...ய மந்திரி சபையு மிருக்
...்கியமாக கெசவாலைத்
...ர்கள் மாகாண ரீ தி
...பன பலம் பெற்றி...க்
... உற்பத்தியை

கரிக்க பொன்னான யோசனைகளை
தொழிலாளர்கள் கூறுகிறார்கள்.
தங்கள் வேலை நிலைமையும் கூலி
நிலைமையும் உயரவேண்டுமென்கி
றார்கள். தாங்கள் உற்பத்தி செய்
யும் நூலும் துணியும் நேரடியாகப்
பொது மக்களுக்குக் கிடைக்க
வேண்டுமென்கிறார்கள். இதற்கு
முதலாளித் திருடர்களை நம்பாமல்,
அவர்களுக்குச் சீட்டுக் கொடுத்து
விட்டு, சர்க்காரே மில்களை ஏற்று
நடத்தவேண்டுமென தொழிலாளி
கள் முழங்குகிறார்கள். இது நிறை
வேறினால் முதலாளிகளின் மூச்சு
நின்றுவிடுமல்லவா!

செங்கொடி தொழிலாளர்களுக்கு
வழி காட்டுகிறது. கம்யூனிஸ்டு
கட்சி அவர்களுக்குத் தலைமை
தாங்குகிறது. ராமமூர்த்தி அவர்க
ளின் மதிமந்திரியாய் விளங்குகிறார்.
ஆகவே செங்கொடியை முறித்து,
அதை ஏந்தி நிற்கும் தொழிலாள
வீரர்களைக் கொலைசெய்து, ...
னிஸ்டு கட்சியை ஒழித்துவிடலா
மென்று முதலாளிகள் மூர்க்கம்
கொண்டிருக்கிறார்கள். இது ஒன்று
தான் தொழிலாளிகளை வயிற்றி
லடிக்கவும், நம் தேசமக்களை நிர்
வாணமாக்கவும், லக்ஷம்லக்ஷமாய்க்
கொள்ளையடிக்கவும் வழி என்று
திட்டமிடுகிறார்கள் முதலாளிகள்.
தேர்தலில் ராமமூர்த்தி தோற்றார்.
ஆனால் செங்கொடி முறிபடவில்லை.
அது வானுறவோங்கி போர் முரசு
கொட்டுகிறது. அதனால்தான் ஆத்
திரம்! பயம்:! கொலை முயற்சிகள்!!!

அமரனின் ஊர்வலம்

மறுநாள் மாலையில்தான் அப்பா
யின் பிரேதம் ஜெனரல் ஆஸ்பத்
திரியிலிருந்து போலீஸ் வண்டியில்
எடுத்து வரப்பட்டு காளீஸ்வரர் மில்
மைதானத்திற்கு வந்தது. மத்தி
யானச் சாப்பாட்டைக்கூட விட்டு
விட்டு, வேலைக்கும் போகாமல்
ஆயிரமாயிரமாய், அலையலையாய்,
கட்சி ஆபிஸை நோக்கி தொழிலா
ளர்கள் பறந்து வந்தார்கள். பெண்
தொழிலாளர்கள் முகத்திலும் மார்
பிலும் அறைந்துகொண்டு அப்பாய்!
அப்பாய்:! என்று அலறியழுத
காட்சியை வர்ணிக்க முடியாது.
லக்ஷ்மி மில், சோமசுந்தரா மில்,
காளீஸ்வரர் மில், ஸ்டேன்ஸ் மில்,
புரூக்பாண்ட் டீ கம்பெனி, முனிசி
பாலிடி முதலியவற்றில் வேலை செய்
யும் அத்தனை தொழிலாளர்க...
வேலை நிறுத்தம் செய்துவி...
கள். பிரேத ஊர்வலத்தி...
லாளர்கள் மட்டும்...
ரம் பேர் இ... ...துடன்
பொதுமக்கள... ...ரக்கணக்
கில் சேர்ந்து... ...கோவை நகர
ஜன சமுத்தி... ...ர்ந்துபோவது
போலிருந்தது...

பொதுமக்க...டத்தும் தொழி
லாளிவர்க்கத்திடத்தும் செங்கொடி
வேரூன்றி விட்டதென்பதையே இக்
காட்சி நிரூபிக்கிறது. முதலாளி
களின் அட்டூழியங்களையும் அவர்
களுக்குக் கங்காணி வேலை செய்
பவர்களையும் நாடு வெறுக்கிறது
என்பதையே இது காட்டுகிறது.

நேர்மையும் நியாய புத்தியுமுள்ள
தொழிலாளி மக்களும் மஹாஜனங்
களும் இந்த அட்டூழியங்களைக் கண்
டித்துக் கிளர்ந்தெழுவார்களாக!

ஆசிரியருக்கு கடிதங்கள்

50 ரூபாய்!

ஐயா,

நெல்லை ஜில்லாவில் உணவைப்
பெருக்கக் கிணறு வெட்டுவதற்
காக உதவித் தொகை விவசாயி
களுக்கு கொடுத்துவருகிறார்கள். ஒவ்
வொரு விவசாயியும் ரூ. 50 லஞ்ச
மாகக் கொடுக்க ஒப்புக்கொண்
டால்தான் இந்தத் தொகை கிடைக்
கிறது. மறுத்தால் மனு காணமல்
போய்விடுகிறது. அல்லது கடைசி
யில் போய்விடுகிறது. இதுவரை
யாரும் லஞ்சம் கொடுக்காமல்
பணம் வாங்கியது கிடையாது.

ஒரு விவசாயி,
இடைசேவல்.

* * *

மாட்டுத்தீவனம்

தோழரே,

கோவை ஜில்லாவெங்கும் மாட்டு
தீவனம் கஷ்டம் அதிகரித்து வரு
கிறது. பல்லடம்தாலூகாவில் பொங்
கலூர், வாரப்பட்டி, பல்லடம் பிர்க்
காக்களில் ஐந்து முழ நீளமுள்ள
ஒரு விசுத்தட்டு 9 முதல் 10 ரூபாய்
வரை விற்கிறது. பொள்ளாச்சி
வட்டாரத்தில் 10 முழ நீளமுள்ள
ஒரு விசுத்தட்டின் விலை ரூ. 25. இந்த
விலைக்கும் சாதாரணமாகக்கிடைக்க
மாட்டேனென்கிறது.

அவினசி தாலூகாவில் கரியக்
கண்டனூர், பட்டக்காரம் புதூர்
போன்ற கிராமங்களில் பயிர் தட்
டைப் பிடிங்கிப் போடுகிறார்கள்.

கோவை தாலூகாவில்தான் நிலை
மை மிகவும் மோசமாக இருக்கிறது
கந்தைய கவுண்டன் ..., எட்டி
மடை முதலிய ஊர்களைச் சுற்றி
யுள்ள இடங்களில் 12,000க்கு மேற்
பட்ட எருதுகளும், பசுக்களும் பட்
டினியால் எலும்பும் தோலுமாக
இருக்கின்றன. இங்குமுதலில் பாலக்
...தாலூகாவிலிருந்து வைக்...
...து கொண்டிருந்தது. 10...
...க் கொண்ட வைக்கோல்
... கண்ட்ரோல் ரேட். இ...
...லக்காடு கலைக்டர் ...

கோல் இங்கு வருவதற்கு பர்மிட்
கொடுப்பதில்லை.

இதனால் இப்போது அது திருட்
டுத் தனமாக இங்கு வருகிறது. 40
ரூபாய் வைக்கோல் 100 ரூபாய்க்கு
விற்கப்படுகிறது. சென்ற வருடம்
பருவ மழை இல்லாததாலும், பூச்சி
களால் பயிர்கள் அழிக்கப்பட்டதா
லும் கஷ்டப்படும் பெரும்பாலான
விவசாயிகளால் இந்த விலை கொடு
த்து வாங்க முடியவில்லை.

மழை பெய்யும் காலம் வந்து விட்
டது. எப்படி உழுது பயிர் செய்
வோம் என்று விவசாயிகள் ஏங்கு
கிறார்கள். இந்த மாட்டு தீவனப் பிர
ச்னை தீர்க்கப்படா விட்டால், இந்த
வெள்ளாமைக்கு மிகவும் பாதகம்
ஏற்படும்.

கே. தர்மலிங்கம்,
கோவை ஜில்லா
விவசாயிகள் சங்கம்.

* * *

குடிக்கத் தண்ணீர் இல்லை

ஐயா,

இந்த ஊரில் பணக்கார மிராசு
தார்கள் ரொம்ப பேர் இருக்கிறார்
கள். அவர்கள் வீடுகளில் தண்
ணீர் பம்புகள் இருக்கின்றன.
ஆனால் ஊரிலுள்ள மற்ற ஏழை
களுக்குக் குடிக்கத் தண்ணீர்
கிடைப்பதில்லை. எந்தப் பணக்
காரரும் இதற்கு வேண்டிய முயற்
சியை எடுத்துக்கொள்வதில்லை.

ஒரு விவசாயி,
ஆனதாண்டவபுரம்.

* * *

படிக்க முடியவில்லை!

ஐயா,

எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்
கூடம் இருக்கிறது. மாதம் எட்டு
அணா கொடுத்துப் படித்து வருகி
றோம். சென்ற மாதம் 25 பேர்
படித்து வந்தோம். இந்த மாதம்
5 பேர்தான் படிக்கிறோம். சம்...
...கொடுக்க முடியாததாலும்
...ளிக்க முடியாததாலும்
...ள் பள்ளிக்கு வரு...

இன்னும் சில தினங்களில் இந்தப்
பள்ளிக்கூடத்தையே மூடிவிட
வேண்டியிருக்கும் போலிருக்கிறது.
வீட்டிலுள்ள பெற்றோர்கள் கையில்
காசு இல்லாமல் திணறுகிறார்கள்.
உபாத்தியாயர் சம்பளமில்லாமல்
திண்டாடுகிறார்.

பஞ்சம் வளர வளர படிப்பையே
மூட்டைக் கட்டி வைத்துவிட வேண்
டும் போலிருக்கிறது.

காங்கிரஸ் மந்திரி சபை உடனடி
யாக இதை கவனிக்கவேண்டும்.
இலவசமாகப் பள்ளிக்கூடங்களை
நடத்தத்தக்க நடவடிக்கை எடுத்துக்
கொள்ளவேண்டும்.

பெரி. ராமசாமி,
இலங்குடி.

* * *

வழிப்பறி

ஐயா,

நான் இவ்வூரில் தலைச்சுமை
மூலம் வியாபாரம் செய்யும் ஒரு
சிறிய ஜவுளி வியாபாரி. என்னைப்
போல் இவ்வூரிலும், இதைச்சுற்றி
யுள்ள கிராமங்களிலும் சுமார் 50
பேர் தலைசுமைமூலம் விற்பனை
செய்கிறார்கள்.

ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல்
மாதம் தொடங்கிய ஒரு வருஷத்
திற்குரிய இலவச லைசென்ஸை
ஜில்லா ஜவுளி கண்ட்ரோல் ஆபீஸ
ரிடமிருந்து தபால் மூலமாகவோ,
நேரடியாகவோ பெற்று வந்தோம்.
ஆனால் இவ்வருடம் இவ்வூர் ஜவுளி
வியாபாரியான ஒரு நாடார் மேற்
படி எல்லோருடைய லைசென்ஸ்
களையும் மொத்தமாக வாங்கி வைத்
துக்கொண்டு, தலைச்சுமை ஜவுளி
வியாபாரிகளிடம் லைசென்ஸ் 1-க்கு
1 ரூபாய் வீதம் வாங்குகிறார்.
ஜில்லா அதிகாரிகளிடமிருந்து ப்ரீ
லைசென்ஸ் கொடுக்கப்படும்போது,
இடைமறித்து பணம் பறிக்கும் ஷை
... இழிவான செயலைத்
...டிக்கை எடுக்க

வி. கருப்பையா,
சிவகாசி.

தியாகிகளுக்கு

சிங்கப்பூர் தொழிலாளர் ...ணக்கம்

கடைசி வரை செங்கொடியைக்
காத்து நின்று, சென்ற தே...
தலில் தொழிலாளரின் வெற்றிக்...
உழைத்து, இதன் காரணமா...
லாளிகளால் ஏவிவிடப்பட்ட ...
களின் பிச்சுவாக்களுக்குப் ...
வீர மரணமடைந்த தோழ...
காரவேலு, கோல்வா...
கான் முதலியவர்களுக்...
கூடிய பொதுக் ...த்தி...
கம் செலுத்தினர்... சி...
தொழிலாளர்கள். வீரத் ...
ளின் குடும்பங்களுக்கு ஜனச...
பிப்பிள்ஸ்வஜ் மூலம் அனுதாபத்...
தெரிவித்துள்ளார்கள்.

சமஸ்தான மக்களின் மீது எ...

"காஷ்மீரைவிட்டு வெளியேறு"

காஷ்மீர் போராடுகிறது

காஷ்மீரில் நடக்கும் அடக்குமுறை ஆட்சியைப்பற்றி, தணிக்கையையும் மீறி நமது நிருபர் அனுப்பியிருக்கும் ரிப்போர்ட்டை சுருக்கித் தருகிறோம் :

ஸ்ரீநகரின் வீதிகளிலே இரத்தம் ! சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களின் கதகதப்பான இரத்தம் !

சர்க்காரின் செய்தி ஸ்தாபனங்களினால் அனுப்பப்படும் செய்திகள் பொய்ச் செய்திகள். அடக்குமுறை அசுரன் பிரதம மந்திரியின் அண்ணன் மகனே ''யுனைட்டேட் பிரஸ்,'' ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்,'' ''ஹிந்து,'' ''ஸ்டேட்ஸ்மென்,'' ''அமிர்த பஜார் பத்திரிகா'' ஆகியவற்றின் நிருபர் அஸோஸியேட்டட் பிரஸின் நிருபர் சர்க்காரின் கையாளான ஒரு ரெட்டி. இவ்விருவரும் அனுப்புகின்ற செய்திகள் முழுவதும் பொய்ச் செய்திகள்.

இவர்கள் என்னதான் தில்லுமுல்லு செய்தபோதிலும் ஒரு உண்மையை மட்டும் மறைக்க முடியாது. அதாவது, காஷ்மீர் போராடுகிறது ! இதுவரை எந்த சமஸ்தான மக்களின் இயக்கமும் போராடி யறியாத விதத்தில் போராடுகிறது.

காஷ்மீர் சிங்கம் ஷேக் முகமது அப்துல்லா கைது செய்யப்பட்ட தினத்தன்று, ஸ்ரீநகரில் மட்டும் இராணுவத்திற்கும் பொதுமக்களுக்கும் 20 தடவைகளுக்குமேல் கைகலப்பு ஏற்பட்டது. கண்மூடித்தனமாக ஜனங்களை சுட்டுக்கொண்டே சென்றது இராணுவம். பம்பாய் மக்களையும், கல்கத்தா மக்களையும் பயமுறுத்தி அடக்குவதற்காகச் சுட்டதுபோல், மிகக் கடுமையாகத் துப்பாக்கி குண்டுகளை கண்ணுக்கு எட்டிய வஸ்துக்களின் மீதெல்லாம் செலுத்திற்று !

மகாராஜாவின் இந்த அயோக்கியத் தாக்குதல் திடீரென்று ஏற்பட்டுவிடவில்லை. இதற்காக கடந்த "11 மாதங்களாக தயாரிப்புகள் செய்யப்பட்டன" என்று ஜவஹர்லால் கூறுகிறார். ஏன் இந்த ஏற்பாடு ?

காஷ்மீர் தேசிய மகாநாடு காஷ்மீர் மக்கள் அவ்வளவு பேரையும் தன்னகத்தே ஆகர்ஷித்துக்கொண்டிருக்கிறது. ஷேக் முகமது அப்துல்லா அதன் தலைவர். பொறுப்பாட்சிக்காகவும், பிரஜா உரிமைகளுக்காகவும் இவ்வியக்கம் போராடி வருகிறது.

இப்போது அந்த மக்களை அப்படியே புறக்கணித்துவிட்டு, காஷ்மீர் மகாராஜா தன்னுடைய கைக்கூலியை இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்ப எத்தனிக்கிறார். இதை எதிர்க்கிறது இவ்வியக்கம். ஜனங்களுடைய பிரதிநிதிகளே அரசியல் நிர்ணய சபைக்குச் செல்ல வேண்டுமென்கிறது.

இதுவரை தேசிய மகாநாட்டை எதிர்த்துவந்த முஸ்லிம் லீக் மகாநாட்டினருடன், ஒரு ஐக்கிய அணியை நிறுவுவதற்கு ஷேக் அப்துல்லா முயற்சி எடுத்துக்கொண்டார். மே மாதம் 10-ந்தேதி இரண்டு மகாநாட்டினரும் சேர்ந்து பாக்கிஸ்தான் தினம் கொண்டாடினார்கள்.

"காஷ்மீரை விட்டு வெளியேறு !" என்பதும் "அமிர்தசரஸ் விற்பனை பத்திரத்தை கிழித்தெறி" என்பதும் காஷ்மீர் மக்களின் போர் கோஷமாக இருக்கிறது.

காஷ்மீர் மகாராஜாவிற்கு 50 லக்ஷ ரூபாய்க்கு பிரிட்டிஷ் சர்க்கார் அந்த நாட்டை விற்றுவிட்டது. இது தான் அமிர்தசரஸ் விற்பனைப் பத்திரம். இந்த விற்பனையின் மூலமே ஒரு தனி குடும்பத்திற்கு அந்த நாடு அடிமையாக்கப்பட்டது. இவ்விதம் விற்கப்பட்டபோதிலும், பிரிட்டிஷ் அதிகார வர்க்கம்தான் அந்நாட்டை ஆளுகிறது. ஜில்ஜித் என்ற இடத்தில் பெரிய பிரிட்டிஷ் ராணுவ தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது உலக யுத்தத்தை நடத்துவதற்கு இந்தத் தளம் மிகவும் முக்கியமானது என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கருதுகின்றனர்.

ஆகவே, காஷ்மீர் தேசிய மகாநாடும், முஸ்லிம் லீக் மகாநாடும் நெருங்கி வருவதையும், "வெளியேறு" என்ற கோஷத்துடன் ஜனங்கள் திரண்டு வருவதையும் கண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்யமும், மகாராஜாவும் பீதியடைந்தனர். இவ்வியக்கத்தை அடக்கக் கடந்த 11 மாதங்களாகவே ஏற்பாடு செய்து வந்திருக்கின்றனர்.

காபினட் தூது கோஷ்டியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தும் போது, பண்டித ஜவஹர்லால் நேரு போப்பால் நவாபுடன் கூடிக் குலாவினார். முஸ்லிம் லீகிற்கு எதிராக மன்னர்களின் ஆதரவைக் காங்கிரஸிற்குப் பெறுவதற்காக, மகாராஜாக்களைப் புகழ்ந்தார். இதையறிந்த அதிகார வர்க்கம், பண்டித நேருவைக் கொண்டே காஷ்மீர் இயக்கத்தை மற்ற இந்திய மக்களிடமிருந்து தனிமைப்படுத்தி அடக்கிவிடலாம் என்று நினைத்தது. இதற்காக பண்டித நேருவிடம் மாஜி காஷ்மீர் பிரதமர் சர். என். கோபாலசாமி ஐயங்கார் போன்ற சிலரை தூது அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

ஷேக் அப்துல்லா "மிகவும் அபாயகரமான பேர்வழி" என்றும், "கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து ரஷ்ய படையெடுப்பிற்காக வேலை செய்கிறவர்" என்றும் பலவாறாகக் கட்டுக்கதைகளைக் கட்டி விட்டது. நேருவிடம் இது பலிக்கவில்லை. நேரு அந்த "தூதுகோஷ்டிகளின்" ஆலோசனைகளைக் கேட்கவில்லை.

எனினும், சமஸ்தான பிரஜைகளின் பிரதிநிதித்வத்தைப் பற்றி காபினட் தூது கோஷ்டியிடம் எந்தக் காங்கிரஸ் தலைவரும் மிகவும் வற்புறுத்தி அடித்துப் பேசவில்லை. இதைக்கண்ட மகாராஜாவும், பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் தைரியம் கொண்டன. போபால் நவாபுடன் காங்கிரஸ் தலைவர்கள் தேநீர் அருந்திகொண்டு இருக்கும்போதே, காஷ்மீர் இயக்கத்தை நசுக்கி விடலாம் என்று முடிவு செய்தனர்.

அகில இந்திய சமஸ்தான பிரஜைகளின் மகாநாட்டில் ஒரு ... மான தலைவர் ஷேக்முக... துல்லா. கடந்த 15-ம் ... ஒரு விஷயத்தை அறிவித்... ராஜாவின் ஆட்சியின்மீது ... சமஸ்தானம் முழு... ...ன வாக்கு எடுக்...

வேண்டுமென்றார். இதைக் கேட்டதும் அதிகாரவர்க்கம்நடுங்கிவிட்டது.

மே 20ம் தேதி அவர் ஜவஹரைப் பார்க்கப் புறப்பட்டார். உடனே பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்திற்கும் கிலி பிடித்துவிட்டது. அவர் வெளியில் சென்றால், இந்தியா முழுவதிலும் சமஸ்தான பிரஜைகளின் சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு திரட்டி விடுவார் என்றும், எல்லா சமஸ்தானங்களிலும் கிளர்ச்சி அதிகமாவதற்கு ஏற்பாடு செய்து விடுவார் என்றும் பீதியடைந்தனர்.

ஆகவே, அவரை டில்லிக்கு வருகிற வழியில் கைது செய்தது இந்தச் செய்தி காஷ்மீர் மக்களின் காதுக்கு எட்டுவதற்கு முன்பே, சமஸ்தானம் முழுவதையும் ராணுவத்தினிடம் ஒப்படைத்தது. ஸிவில் நிர்வாகம் முழுவதையும் நிறுத்தி வைத்தது.

தலைவர் கைது செய்யப்பட்ட செய்தி கேட்டு கூட்டமாக வீதியில் கூடிய மக்கள்மீது ராணுவம் ஏவிவிடப்பட்டது. எதிர்பாராதவிதமாய் மக்கள் தாக்கப்பட்டனர். வீதியெல்லாம் இரத்தம்.

சுதந்திரத்திற்காகப் போராடும் மக்கள் இத்தகைய திடீர்தாக்குதலை கண்டு நடுங்கிவிட மாட்டார்கள். வீரத்துடன் எதிர்த்துப் போராட ஆரம்பித்தனர்.

போராட்டம் நடக்கிறது; உயிருக்காக; சுதந்திரத்திற்காக: வாழ்க்கைக்காக !

...சூழ்ச்சி

ச... ஜனங்களை ... ஏகாதி... திய வழிகள் ...வதற்கு ... ஆளுகின்றனர்.

காஷ்மீரத்து ...ரு ஹிந்து. ஜனங்கள் எல்லோரு(ம்) முஸ்லிம்கள். ஆகவே, ஹிந்து ராஜாவை முஸ்லிம் வெறியர்கள் அழிக்க முயற்சிப்பதாகவும், ஹிந்து மகாராஜாவைப் பாதுகாப்பதற்கு ஹிந்துக்கள் திரள வேண்டும் என்று மகாராஜா பிரசாரம் செய்கிறார்.

ஹைதராபாத் நிஜாம் ஒரு முஸ்லிம். ஆனால் பெரும்பாலான ஜனங்கள் ஹிந்துக்கள். ஆகவே, பிரஜா உரிமைக்காக ஜனங்கள் கிளர்ச்சி செய்தால், "முஸ்லிம் ராஜ்ஜியத்தை அழிப்பதற்கு ஹிந்துக்கள் கிளம்புகிறார்கள். முஸ்லிம் மக்களே! நீங்கள் நிஜாமை ஆதரித்துப் பாதுகாத்து நில்லுங்கள்" என்று நிஜாம் கூலிகள் பிரசாரம் செய்கின்றனர்.

திருவாங்கூரில் சர். ஸி. பி. ராமசாமி ஐயரின் ஹிட்லரீய ஆட்சியை எல்லோரும் அறிவார்கள். அவரு...ய சூழ்ச்சி முறை, ஹிந்து மக்...ம், கத்தோலிக்கக் கிருஸ்தவர்... ...த்து மோத விடுவதாகும்.

...ம், ஏகாதிபத்ய அடிச்... பின்பற்றி, சமஸ்தானாதி... ...னங்களைப் பிளடுபடுத்... முயற்சி செய்கிறார் ...ம், அவர்களின் இந்த ...ஷ்மீர் ... பலிக்கவில்லை. ...பண்டி... ...களும் முஸ்லிம் ...க்கிய மகாநாட்டுடன் சேர்...ட்டனர். இந்த ஒற்றுமையைக் ...தான் அதிகார வர்க்கம் பீதி...ந்து, கோர அடக்குமுறை ...தொடங்கியிருக்கிறது;

காஷ்மீரிலே படுகொலை! ஜாலியன்வா... ராணுவத்தின் பயங்கர ஆட்சி, கண்ணைக் கவ...

சமஸ்தான எதேசாதிகாரம் அங்கு மக்களி... சமஸ்தானங்களில் இன்னும் இந்த யுத்தம் ப... வதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

திருவிதாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை... நாட்டிலுள்ள எல்லா சமஸ்தானங்களிலும் "இ... கிறது. காஷ்மீரில் நடப்பதுபோல, மிலேச்ச... லும் ஜரூராய் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி மாதத்தில், "இதோ சுதந்திரம் கொண்... சமயத்தில் பம்பாய் நகரில் நானூறு இந்தியர்களின் உயி... அநேக வீரர்கள் உயிர் துறந்தனர். "சுதந்திரம் வேண்டும்"... டித்துக் கொண்டே, "இதோ சுதந்திரம்" என்று அவர்க... தார்கள்." இப்போது,—மே மாதத்தில்—அவர்களுடைய... ணத்தை" நிரூபிக்கத் தொடங்கியிருக்கின்றனர். நம்முடைய... கன்கள் மூலம் வழங்கத் தொடங்கியிருக்கின்றனர். "சட்ட... என்றும் கூறிக்கொண்டே, அவ்வுரிமைகளைக் கேட்டுக் கி... வெள்ளத்தில் ஆழ்த்துவதன் மூலம், அவற்றை வழங்க ஆரம்...

ஏகாதிபத்தியவாதிகள் பொய்யர்கள்; தில்லுமுல்லு திருகுதாளங்களின் சிறந்த அயோக்கியர்கள். அவர்கள் சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. அவர்களுடைய கையாட்களும் அப்படியே !

சொல்லைக் கேட்டு மயங்குகிறார்கள் சில தலைவர்கள். ஆனால் செயலைப் பார்த்து விழிப்புறும்படி நாம் ஜனங்களிடம் கூறுகிறோம்.

சமஸ்தானாதிபதிகளின் இந்த அடக்குமுறைக்கு என்ன அர்த்தம்?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஏற்படுத்தப்போவதாகக் கூறும் சட்டதிட்ட நிர்ணய சபைக்குத் தங்களுடைய சொந்த கைக்கூலிகளை அனுப்ப சமஸ்தானாதிபதிகள் விரும்புகிறார்கள். சமஸ்தான மக்களின் உண்மைத் தலைவர்களைப் பிரதிநிதிகளாக அனுப்ப மறு...றனர்.

ஆனால் ஜனங்கள் அ...டைய கைப்பாவைகள் ... அந்த எதேச்சாதிகார அசுர... ஆட்சியை ஜனங்கள் நன்கு... வார்கள். ஆகவே, தங்களு... பிரதிநிதிகளை அனுப்பின... தங்களுக்கு விமோசனமேற்ப...யுண்டு என்று கூறுகிறார்கள்.

இந்த இயக்கம் வளர்வ... முன்பே, அரசியல் நிர்ணய ... ஏற்படுவதற்கு முன்பே, இவ்... கத்தை அடக்கி ஒழித்துவிடுவ... திட்டமிடுகின்றனர்.

காஷ்மீரத்தில் நடத்தப்... அசுர அடக்குமுறையைப் பா... "இந்தியாவிலுள்ள சகல ... தான மக்களும் இதை எதி... கிளர்ச்சி செய்ய தயாராக ...

அவர்கள்

விடுதலை செய்யப்படவேண்டும்

வங்க மாகாண சிறைச்சாலைகளிலே இன்றும்கூட நாற்பது அரசியல் கைதிகள் பல்லாண்டுகளாகத் தண்டனையை ஏற்று புழுங்கி வருகின்றனர். இதுவரை அவர்கள் மொத்தத்தில் ஜெயிலில் 600 வருடங்கள் கழித்து விட்டிருக்கின்றனர்! சிட்டகாங் தளவாடக் கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் இந்த கோஷ்டியிலிருக்கின்றனர்.

மந்திரி சபை தூது கோஷ்டி புது டில்லிக்கு சென்ற ஏப்ரல் மாதத்தில் வந்த காலத்தில், காந்திஜி அத்தூது கோஷ்டியை பலமாக நிர்ப்பந்தித்து ஸ்ரீ ஜயபிரகாஷ் நாராயணனை விடுதலை செய்யும்படிச் செய்தார். அதேபோல, வங்காள வீரர்களின் விஷயத்திலும் அவர் குறுக்கிடுவார் என்று வங்க மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். அதிலும் லாகூர் சதி வழக்குக் கைதிகள் பஞ்சாபில் விடுதலையுற்றனர் என்ற விஷயம் காதுக்கு எட்டவே இந்த ஆவல் வங்காளத்தில் எல்லையற்றதாகியது.

ஆனால் இந்த நம்பிக்கையும் ஆவலும் ஏமாற்றத்தில் முடிந்தன. நமது தேசியத் தலைவர்கள் இதைப்பற்றி தூது கோஷ்டியுடன் போராடாது இருந்து விட்டனர். அதன் விளைவாக, தட்டிக்கேட்க யாருமின்றி வங்க மாகாண அதிகார வர்க்கம் கைதிகள் விடுதலை கோரிக்கையை உதாசீனஞ் செய்து வந்தது.

முயற்சியின்மேல் முயற்சி!

இவர்களின் விடுதலைக்காக நாடெங்கும் கிளர்ச்சி செய்வதற்காக பிரபல வங்க காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ. ஜே. ஸி. குப்தா தலைமையில் கமிட்டி யமைக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ குப்தா கிரிப்ஸ் துரையைப் பேட்டி கண்ட போது 'நல்லுணர்ச்சி நிறைந்த' அந்தத் துரையும் 'அவர்கள் பயங்கர வாதிகளாயிற்றே' என்று ஸி. ஐ. டி.களின் பத்தாம் பசலி வாதத்தை திருப்பிச் சொல்லி கைவிரித்து விட்டார். பயங்கர வாதத்தை அந்தக் கைதிகள் நிராகரித்து கம்யூனிஸ்ட்களாகி விட்... சுட்டிக்காட்டியது ... ஏறவில்லை. வங்க... பாருங்கள் என்று ... வங்... கா...

...ரும், சோஷலிஸ்ட் என்றும் விளம்பரப்படுத்திக் கொள்வதில் பிரியமுள்ளவர். அவர் என்ன சொன்னார்? அவரும் 'பயங்கரவாத'ப் பூச்சாண்டியைக் காட்டினார் ஸ்ரீ குப்தாவுக்கு. அதோடு அந்த 'சோஷலிஸ்ட்' கவர்னர் நின்று விடவில்லை. உங்களுடைய விடுதலைக் கமிட்டி எல்லா கட்சிகளின் ஆதரவையும் பெற்றிருக்கிறதா என்று கேட்டார். கமிட்டியின் முக்யமான காரியதரிசிகளில் ஒருவரான சௌதரி ஹோசேன் ஒரு பிரபல லீகர்தான் என்று கேட்டவுடன் அவருடைய வாய் மூடியது. விடுதலை செய்வோம், செய்ய மாட்டோம் என்று ஒன்றும் சொல்லாது ஸ்ரீ குப்தாவை போகச் சொல்லி விட்டார்.

அடக்குமுறை தான் கிளர்ச்சிக்கு ஊக்கம்

அதோடு சங்கதி முடிந்துவிடவில்லை. கவர்னரின் உத்தரவுகள் மறுநாள் மாகாணமெங்கும் பறந்து தோழர் கல்பனா தத் எழுதிய "சிட்டகாங் வீரர்கள்" என்ற புத்தகம் பறிமுதல் செய்யப்பட்டது. தடையுத்தரவும் போடப்பட்டது. இதர கைதிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் தோழர் நிரஞ்சன் சென் எழுதிய வேறொரு புத்தகமும் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டது. விடுதலைக் கமிட்டியின் பல தஸ்தாவேஜிகளும் பறிமுதலாயின. விடுதலை இயக்கம் மாகாணமெங்கும் பரவாது தடுக்க முயற்சிக்கும் வங்கக் கவர்னரின் கைவரிசைகள் இவை.

அதிகார வர்க்கத்தின் சவாலை ஏற்றுக் கொண்டு விடுதலைக் கமிட்டி வங்க மக்களை கிளர்ச்சி செய்யுமாறு அறை கூவியது. தேசியப் பத்திரிகைகள் மக்களின் கோரிக்கையை முழங்கின. அமிர்த பஜார் பத்திரிகா நீண்ட தலையங்கத்தில் "விடுதலை செய்க" என்று வரைந்தது.

சிட்டகாங் நகரத்திலிருந்து குடியேறிய கல்கத்தா வாசிகள் தாங்களாகவே முன்வந்து அறிக்கை விட்டனர். பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தையும் கல்கத்தாவில் ந...தினர்.

கிளர்ச்சி பரவத் ...து.

இதன் நடுவே ம...

களில் காங்கிரசும், லீகும் இ... கின. காங்கிரஸ்-லீக் கூட்டு மந்... சபை அமைக்க முயற்சிகள் நட... காலமது காங்கிரஸ் தலைவர் ... கிரன் சங்கர் ராய் மாகாண ... குடன் கூட்டு மந்திரி சபை அ... பதைப்பற்றி பேசும்போது ச... அரசியல் கைதிகளை விடுதலை ... வதை முதற் பெருங் காரிய... மந்திரி சபை ஏற்றுக்கொ... வேண்டும் என்று வாதாடி... ஆனால் லீக் தலைவர் சுராவர்... பாதுகாப்புக் கைதிகளை மட்... விடுவிக்க ஒப்புக் கொண்ட... ஆயுள் தண்டனை பெற்றிருக்... கைதிகளை விடுதலை செய்யும் பி... னைக்கு பொறுப்பு வகிக்க மறு... விட்டார்.

லீக் பத்திரிகைகளில் ஒன்று... இதைக் கண்டிக்கவில்லை. அ... யல் அபிப்பிராய பேதங்களு... வகுப்புவாத மனோபாவமும் ம... டித் கிடந்த நேரத்தில், ஜனநாய... துக்கு விரோதமான போக்கு... கண்டிக்கப்படாமலே போகும் அ...லவா ?

லீகர்களின் பேராதரவு

"விடுதலைக் கமிட்டியினரின் உ... தளரவில்லை ; சோர்வு தட்டவில்... கிளர்ச்சியை பலப்படுத்துங்கள்... என்றது கமிட்டி.

சிட்டகாங்கிலிருந்து மறுபடி... பொறி பற்றிப் பரவியது. கம்... னிஸ்ட் கட்சிக்கு சளைத்தத... என்ற முறையில் சிட்டகாங் மு... லிம் லீக் இயக்கத்தில் முன்னே... யது. பல ஜில்லாக்களில் காங்... ரஸ், லீக் தலைவர்களும், ஊழி... களும், மக்களும் பேராதரவு அ... தனர். ஜனாப் அப்துல் ஹ... சௌதரி (மாகாண மேல் சட்ட... சபை உபதலைவர்), போக்ரா... ரின் உன்னத லீக் தலைவர் பி. எ... ஏலியாஸ், இன்னும் பல லீகர்க... இயக்கத்தில் பங்கெடுத்துக்கொ... டனர்.

இம்மாபெரும் இயக்கம் பரவியத... விளைவாக வங்க சட்டசபை ... அங்கத்தினர்களில் எண்பது பே... ...ந்த மேலாக (அதாவது மூன்... ...ண்டு பங்கு எனலாம்) ... விடுதலை செய்க ...ாகவே கைகயெழுத்திட்டு ...க்கு எழுதியுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

...ரதிகாரத்தின் யுதத பிரகடனம்

...யயும் மிஞ்சிவிட்டது! பிரிட்டிஷ் இந்திய
...ின் ...டைகளில் ரத்தத்தை ஓடச் செய்கின்றது!
...தத்...தயே தொடுத்துவிட்டது. மற்ற இந்திய
...தொடுக்கப்படவில்லை. ஆனால் தொடுக்கப்படு

...தென்னாட்டு சமஸ்தானங்கள் உள்பட, வட
...ஜோயோ யுத்தம்" என்ற நிலைமை நிலவி வரு
...ட்சியை நிலைநாட்ட ஒவ்வொரு சமஸ்தானத்தி

...என்றார்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வாதிகள். ஆனால் அதே
...டைய துப்பாக்கி துண்டுகள் ருசி பார்த்தன. கல்கத்தாவில்
...ம் இயக்கத்தை—பொது மக்களை—இரத்த வெள்ளத்தில் மூழ்க
...ய "நல்லெண்ணத்"தை இந்தியத் தலைவர்களிடம் நிரூபித்
...டைகளான சமஸ்தானாதிபதிகள் தங்களுடைய "நல்லெண்
...ான சமஸ்தான மக்களுக்குப் "பிரஜா உரிமைகளை" மெஷின்
...திருத்தங்கள்" என்றும், "சீர்திருத்தப் பாதையில் முன்னேற்றம்"
...வளர்ந்து வந்திருக்கும் இயக்கத்தை—பொது மக்களை—இரத்
...னர்.

...என்று பண்டித ஜவஹர்லால்
...கூறுகிறார்.
...ம் சொல்கிறோம், சமஸ்தான
...ள் மட்டும் எழுந்தால் போதாது
...! பிரிட்டிஷ் இந்தியா மக்க
...எழவேண்டும்! அகில இந்தி
...ம் முஷ்டியை உயர்த்த வேண்

...னெனில், காஷ்மீர் மக்களின்
...ாட்டம், சமஸ்தான மக்களின்
...ாட்டம் மட்டுமல்ல. அது நம்
...யப் போராட்டம்.
...ந்திய மக்களில் நாலிலொரு
...யினர் சமஸ்தான மக்
...நிலப் பிரபுத்வ எதேச்சாதி
...த்தின் கீழும், பிரிட்டிஷ் ஏகாதி
...த்தின் கீழும் அடிமைப்பட்ட
...ல்லாமல், தேசிய தாயகங்களி
...து பிளக்கப்பட்டு சின்ன
...னமாகிக் கிடக்கிறார்கள்.

நம் நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால், பரிபூரண சுதந்திர விருக்ஷம் ஓங்கி வளரவேண்டுமானால், ஏகாதிபத்யம் மட்டும் ஒழிந்தால் போதாது. அந்த ஏகாதிபத்யத்தின் தூண்களாக இருக்கும் நிலப் பிரபுத்வ எதேச்சாதிகாரமும் மண்ணோடு மண்ணாகமடிய வேண்டும். அவ்வெதேச்சாதிகாரத்தின்கீழ் இன்னலுறும் லக்ஷக் கணக்கான மக்கள் விடுதலை யடையவேண்டும்.

நாம் போராடுவோம்; நம் சகோதரர்களுக்காக! நாம் கிளர்ந்தெழுவோம்; எதேச்சாதிகாரத்தை எதிர்த்து! நாம் முஷ்டியை உயர்த்துவோம்! ...டக்குமுறை ஆட்சியை அழிக்க!

வாழ்க சமஸ்தான மக்களின் இயக்கம்! வீழ்க எதேச்சாதிகாரக் கோட்டை!

ராஜபுதன சமஸ்தானங்களில் அசுர அடக்குமுறை

ராஜபுதனவிலுள்ள சமஸ்தானங்களில் நடக்கும் அடக்குமுறை ஆட்சியைப்பற்றிய விபரங்களைத் தொகுத்துக் கீழே தருகிறோம்.

பிக்கானீர் சமஸ்தானம்

ஜனவரி: பிரபல கிஸான் தலைவர் சௌதிரி ஹனுமான் சிங் கைது செய்யப்பட்டார்.

மார்ச்: பொதுஜனத் தலைவர்கள் புரோகித்மூலாராமும், சௌதிரிகனபதி சிங்கும் கைது செய்யப்பட்டனர். கிஸான் தலைவர்கள் ஸ்வாமி கார்மானந்தும், சௌதிரி ரீகாராமும் கைது செய்யப் பட்டனர். 150 விவசாயிகள் பாதுகாப்பு சிறையில் தள்ளப்பட்டனர்.

ஏப்ரல்: கிஸான் தலைவர் சௌதிரி ரீகா ராம், சிறையில் அபாயகரமாக அடித்துப் போடப்பட்டார்.

ஜனங்கள் இயக்கத்தை அழித்துவிடுவதற்காக ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனிலும் சோல்ஜர்கள் நிறுத்தப்பட்டனர், மெஷின் கன்களுடன் ஒரு இராணுவ படை வரவழைக்கப்பட்டிருக்கிறது.

மே: சௌதிரி கும்பராம் கைது செய்யப்பட்டார்.

ஜெயப்பூர் சமஸ்தானம்

ஜனவரி: பிக்கானீர் பிஜாபாரிஸாதின் தலைவர் ஸ்ரீ ரகுவீர் தயாள் நாடு கடத்தப்பட்டார். சீக்காவதி என்ற இடத்தில் அநேக விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். சீக்காவதி ஜில்லா பிரஜா மண்டலத்தின் பொதுக் காரியதரிசி பண்டிட் தார்கேஷ்வர் சர்மா கைது செய்யப்பட்டார்.

பிப்ரவரி; பிரஜா மண்டல கமிட்டியின் அங்கத்தினர் ஸ்ரீ வித்யாதர் குல்ஹரி கைது செய்யப்பட்டார். மிகக் கேவலமாக நடத்தப்பட்டதனால் 8 அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் தொடங்கினர்.

ஏப்ரல்: ஸ்ரீ ராதா வல்லப, முன்ஷி காபர் அலி, ஸ்ரீ துர்காலால், ஜஹீர் ஹுசேன் சௌதாகர், ஆகிய தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மீவார் சமஸ்தானம்

பில்ஸ் என்ற மக்களின் பிரபல தலைவரும், பிரஜா மண்டல பிரமுகர்களில் ஒருவருமான ஸ்ரீ மோதிலால் தேஜாவத் கைது செய்யப்பட்டார்.

பாபு ராஜேந்திர பிரஸாதினால் திறந்து வைக்கப்படுவதற்கிருந்த பிரஜா மண்டல மகாநாட்டுக்குத் தடையுத்தரவு போடப்பட்டது.

ஆள்வார் சமஸ்தானம்

பிப்ரவரியில் பிரஜாமண்டல ஊழியர்களில் 13 பேர் கைது செய்யப்பட்டனர். ஏப்ரலில் அசுர அடக்குமுறை. மியோ விவசாயிகள் சுடப்பட்டனர். அநேகர் உயிரிழந்தனர்.

ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முனிஸிபல் சேர்மன் தள்ளப்பட்டு, ஒரு மாஜிஸ்ட்ரேட் அந்த ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார்.

உதயபூர் சமஸ்தானம்

ஏப்ரலில், பட்டினியால் வா... ஜனங்கள் உணவு கேட்டதற்கா... தடியால் அடித்து வீழ்த்தப்...

...னர், சுபாஸ் தினத்தையும், சுதந்திர தினத்தையும் கொண்டாடியதற்காக வித்தியாபவன்மீதும், ஹிந்தி வித்யாபீத்மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

குமாஸ்தாக்கள் வேலை நிறுத்தத்திற்காக, 100 குமாஸ்தாக்கள் கைது செய்யப்பட்டனர்.

மற்ற சமஸ்தானங்கள்

ஒரு பொய் கேஸில் சம்பந்தப்படுத்தப்பட்டு, ஜோத்பூர் சமஸ்தானத்தில், கிஸான் சபையின் உபகாரியதரிசியும், வேறு ஏழு பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பசியால்வாடும் மக்கள் மீது... பன்ஸ்வாதா சமஸ்தானத்தில் ... யடிப் பிரயோகம் செய்யப்பட்... பொதுஜன ஊழியர்கள் எ... ரும் கைது செய்யப்ப... ஊரடங்கு சட்டம் அமுல்...

பிரஜா மண்டல... தலை... ஜகல்கிஷோர் சது... பூர் சமஸ்தானத்தி... யப்பட்டார்.

பொதுஜன ஊழி... மல்கோபியை, ஜய... னத்தில் சமஸ்தா... கள் கொன்றார்க... கூட்டம் கலைக்கப்ப... பூர் சமஸ்தானத்தில், ... வலமும், பொதுகூட்... பிரயோகத்திற்கு... லீஸும், ராணு... தை சேர்ந்து செய்... மேல் படுகாயமுற்ற...

ஏகாதிபத்திய சதிகாரர்களால் நாம் ஏமாற்றப்படுவதா...

நிருபர்கள் மகாநாட்டில் தோழர் ரஜனி பாமிதத்

மே மாதம் 27-ம்தேதி காலை 11 மணிக்கு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் தலைவர் ரஜனி பாமி தத் சென்னை பத்திரிகை நிருபர்களை சந்தித்தார். சென்னை தினசரிப் பத்திரிகைகளின் நிருபர்கள், செய்தி ஸ்தாபன நிருபர்கள், வாரப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தனர்.

...ரிட்டிஷ் ஜனநாயக இயக்கத்
...தின் சார்பில் நான் உங்களி
...பேசுகிறேன். இந்திய சுதந்திரத்
...ாக பாடுபடும் பிரிட்டிஷ் ஜன
...வாதிகளின் வாழ்த்துகளை
...ய மக்களுக்கு தெரிவித்துக்
...கிறேன்" என்று குறிப்பிட்டு
...அவர் இந்திய பிரச்னையைப்
... வெளியிட்ட கருத்துகளை
...கித் தருகிறோம்.
...இந்தியாவின் எதிர்காலத்தைப்
... பிரிட்டிஷார் தீர்ப்பு அளித்
...பதைக் குறித்து நான் வருந்து
...ன். இந்தியாவின் பிரச்னைகளை
...களின் பிரதிநிதிகள்தான்
...காள்ள வேண்டுமென்
... கருத்து. பிரிட்டிஷார்
... அளிக்கும்படியான தீர்ப்
...யமான நிலைமை ஏற்பட்டது
...தத்தக்கது.
...ரிட்டிஷ் தீர்ப்பைக்குறித்து நம்
...டய கொள்கை என்ன? அது
...திகரமானதா? இதுவே இந்தி
...ள் முன்நிற்கும் பிரச்னை.
...து நீண்டகால அரசியல் ஸ்தம்
...பை உடைக்கிறது. காங்கிரசும்
...ம் ஒத்துழைக்க அது ஒரு அடிப்
...டயை சிருஷ்டித்திருக்கிறது.
...ல் அதில் பல அபாயகரமான
...சங்கள் இருக்கின்றன.

லாஸ்கி வாதம்

...ரிட்டிஷ் தொழிற்கட்சி தலைவர்
...சிரியர் லாஸ்கியின் அறிக்கை
...நீங்கள் படித்திருப்பீர்கள். சரித்
...திலே நடக்காத அதிசயம் இந்த
...டிஷ் தீர்ப்பில் அடங்கியிருப்ப
... அவர் கூறுகிறார். ஆளும் கூட்
...தானகவே அதிகாரத்தை விட்
... கொடுப்பதாக அவர் கூறு
... இதை நிரூபிக்க அவர்
...று ஆதாரங்கள் கூறினார்.
...ல் மூன்றும் தவறு,
... இந்தியாவில் ஏற்படப்போகும்
... தற்காலீக சர்க்கார் ஆஸ்டிரே
..., கானடா முதலிய டொமினி
...களின் சர்க்கார்களைப் போலி
...தமென்று அவர் குறிப்பிட்டார்.
... தவறு. கானடா, ஆஸ்டிரே
...முதலிய நாடுகளில் பிரிட்டிஷ்
...னர்-ஜெனரல் ஒரு அலங்கார
...ம்மை; நீட்டிய இடத்தில்
... 'ரப்பர்...

போகிறது. "இது குடியேற்ற நாட்டு அந்தஸ்துகூட இல்லை" என்று மாஸ்கோ ரேடியோ குறிப்பிட்டது 100-க்கு 100 உண்மை.

2. "தற்காலிக சர்க்காரில் கலந்துகொள்ளுவதற்குமுன் பிரிட்டிஷ் திட்டத்தை (மந்திரிமார் தீர்ப்பை) ஏற்கவேண்டுமென்று வலுக்கட்டாயமில்லை" என்கிறார் லாஸ்கி. இதுவும் தவறு. இதைப்பற்றி பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் நான் பெதிக்லாரன்ஸ் பிரபுவைக் கேட்டேன். மந்திரிகள் திட்டத்தை ஏற்றுக்கொண்டால்தான் தற்காலீக சர்க்கார் அமைக்கப்படு மென்றும், மந்திரிகள் தீர்ப்பின்படி அரசியல் நிர்ணய சபையை கூட்டுவதுதான் தற்காலீக சர்க்காரின் முக்கியமான வேலையென்றும் பெதிக்லாரன்ஸ் பதிலளித்தார்.

3. மந்திரிகள் தீர்ப்பை மாற்ற அரசியல் நிர்ணய சபைக்கு அதிகாரமுண்டு" என்கிறார் லாஸ்கி. இதுவும் தவறு. காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்துக்கு மந்திரிகள் கோஷ்டி விடுத்த பதில் அறிக்கையே இதற்கு சான்று. தொகுதி வட்டங்களை மாற்றி யமைக்க முடியாது என்று மந்திரிகள் கூறுகிறார்கள்.

திட்டத்தின் தோஷங்கள்

மந்திரிகள் திட்டத்தின் முக்கியமான தோஷங்கள் என்ன?

1. தற்காலிக சர்க்கார் வைஸ்ராய் நிர்வாக சபைதான் மாற்றியமைக்கப்படுகிறது. இந்தியர் கேட்டது அதிகார மாற்றம்; மந்திரிகள் திட்டம் ஆள் மாற்றம். இந்திய மக்களுக்கு பொறுப்புள்ள தற்காலிக சர்க்கார் இல்லை.

2. அரசியல் நிர்ணய சபையில், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சமஸ்தானாதிபதிகள் என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. இந்த பிரிவுகள் ...ட்டிலுள்ள... தும்...

...கப்படுகிறது. ஹிந்து தொகுதி வட்டம், வடமேற்கு முஸ்லிம் தொகுதி வட்டம், வடகிழக்கு முஸ்லிம் தொகுதி வட்டம் என்று பிரித்திருப்பது அபாயகரமானது. காங்கிரஸும் லீகும் தத்தம் கொள்கையில் பிடிவாதம் பிடித்தால், நெருக்கடிதான் உண்டாகும். முஸ்லிம் தொகுதி வட்டங்கள் யூனியனில் சேர மறுத்தால் என்ன செய்வதென்று பெதிக்லாரன்ஸை பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கேட்டபோது, "அவர்களே யூனியனில் சேரும்படி கட்டாயப் படுத்துவோம்" என்று அவர் பதிலளிக்கவில்லை. அத்தகைய முறையை கடைப்பிடிக்க மாட்டார்கள் என்று தான் நம்புவதாகவும், அப்படிச் செய்தால் நெருக்கடி ஏற்படு மென்றும் அவர் கூறினார்.

3. இதைவிட பெரிய அபாயம்—மகாராஜாக்களின் பிரச்னை. அரசியல் நிர்ணய சபையில் நாலில் ஒருவர் சமஸ்தானாதிபதிகளால் நியமிக்கப்படுவார்கள். ச... ளால் தேர்ந்தெடு... மென்ற கட்டாயம் ...

4. யூனியன் சர்க்... கிடையாது. அய... பாரம், சுங்கம் மு... கள் யூனியன் சர்க்காருக்கு ... யாது. வறுமையை எதிர்த்து... போராட, இந்தியாவின் பொருளா... தார வளர்ச்சிக்காக, இந்தியா முன் பல வேலைகள் இருக்கின்றன. ஆனால் பொருளாதாரத் திட்டம் போட யூனியனுக்கு அதிகாரமில்லை.

இந்தியாவிலுள்ள அரசியல் வேற்றுமையின் தவிர்க்க முடியாத விளைவு என்று வியாக்யானம் செய்வதில் பயனில்லை. இந்த திட்டம் சுதந்திரமல்ல. இந்தியாவின் லட்சியத்தை இதன்மூலம் நாம் அடைந்து விடவில்லை.

"திட்டத்தை ஏற்றுக்கொள், இல்லாவிட்டால் நிராகரித்துவிடு" என... ...கூறுவதை இந்தியா... ...ா முடியாது. மந்தி... ...திருத்தியமக்க... ...களைச் சொல்... ...கு மந்திரிகள் ... ...பாறுத்து, இந்திய...

இறுதி நடவடிக்கையை நிர்ணயிக்கலாம்.

காங்கிரஸ் கோரிக்கைகள்

காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானத்தில் அடங்கியுள்ள நான்கு முக்கியமான கோரிக்கைகளையும் நான் ஆதரிக்கிறேன்.

(1) தற்காலிக சர்க்காருக்கு பரிபூர்ண அதிகாரம் இருக்க வேண்டும்.

(2) ஒரு தொகுதி வட்டத்தில் ஒரு மாகாணத்தை வலுக்கட்டாயமாக இணைக்கக் கூடாது.

(3) சமஸ்தானங்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க சமஸ்தான மக்களுக்கு உரிமை வேண்டும்.

(4) அன்னிய துருப்புகள் இருப்பது நாட்டின் சுதந்திரத்துக்கு களங்கம். அதனால் பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியாவை விட்டு உடனே வெளியேற வேண்டும்.

என் யோசனைகள்

இவற்றை ஆதரிப்பதுடன், இன்னும் சில திருத்தங்களையும் நான் சேர்க்க விரும்புகிறேன்.

1. இந்திய சுதந்திரத்தை அங்கிகரித்து பிரிட்டிஷ் சர்க்காரும், பார்லிமெண்டும் பிரகடனப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் சுதந்திரம் தருவதாக அளிக்கப்படும் வாக்குறுதி போதாது. மந்திரிகள் திட்டப்படி கூடும் அரசியல் நிர்ணய சபை உண்மையான பிரதிநிதித்துவ சபையல்ல; அதற்கு அதிகாரம் குறைவு. அதனால் அது பரி...ர்ண சுதந்திரம் கோருமென்று எதிர்பார்க்க முடியாது.

3. அரசியல் நிர்ணய சபை சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். கிராமாதிகாரிகளின் கணக்குகள், ரேஷன் கணக்குகள் இவற்றை அடிப்படையாகக்கொண்டு மூன்று ... வாக்காளர் ஜாப்தா ...செய்ய முடியும். வயது வந்...னைவராலும் தேர்ந்தெடுக்... அரசியல் நிர்ணய சபை... ...ந்திர இந்தியாவை ... ...படுத்த முடியும்.

4. சமஸ்தானாதிபதி... திருக்க வேண்டியதில்... களுக்கு இடமுமில்லை. பிரிட்டிஷ்... சர்க்காரின் ஆதிபத்திய உரிமைகள் ...ரத்தாவதாக மந்திரிகள் கூறுகிறார்கள். 563 சமஸ்தானங்களும் சுதந்திரமாகின்றன! இந்த சமஸ்தானாதிபதிகள் யாருக்கும் பொறுப்பல்ல! தான்தோன்றித்தனமாக இந்தியாவை துண்டாடும் சமஸ்தானங்கள் நீடிக்கக்கூடாது. சமஸ்தானாதிபதிகளுக்கு பிரிட்டிஷ் சர்க்காரைத் தவிர யாரும் ஆதரவு தரவில்லை.

5. பிரிட்டிஷ் ராணுவம் வாபஸாவதுடன், இந்திய ராணுவத்தை இந்திய மயமாக்க வேண்டும். இந்திய ராணுவத்தை இந்திய மயமாக்க 10, 20 வருஷங்கள்கூட... போதாது என்று சேனாதிபதி கூ... கிறார்! சுதந்திர இந்தியாவுக்கு ...திர ராணுவம் வேண்டும்.

6. அயல்நாட்டுக் கொள்... லும் இந்தியாவுக்கு பரிபூர்ண... திரம் வேண்டும். பிரிட்டிஷ்... பத்தியம் இந்தியாவை தன்... வாக்கு மண்டலத்தில் ... பார்க்கிறது. தவறான... இந்தியா இருக்கக்கூட... இந்தியாவுக்கு சுதந்தி... நாட்டு கொள்கை வே... திர முன்னணியுடன்... யாவின் நலன்கள் ... கிறது. ஐரோப்ப... வரும் புதிய... சோஷியலிஸ்ட்... பிரிட்டிஷ்-அ... யங்களை ... அடிமை நா... கங்கள்—இ... கொண்ட ... இந்தியா த... தை வகிக்க ... சுதந்திரத்தை... ளின் ஒற்று... வேண்டும். இ... களை ஏகாதி... யோகப்படு... ஒற்றுமை... எடுத்து...

கா...

துணிப் பஞ்ச...திற்கு முத...ளிகளே பொறுப்பாளிகள்

ஆலைகளை அரசாங்கமே நிர்வகிக்கவேண்டும் [ஜீவா]

துணிப் பிரச்னை ஜனப் பிரதிநிதிகளிடையில் விவாதத்திற்கு வந்துவிட்டது. மாகாணத்தின் துணி நூல் நிலைமைகளைப் பற்றியும், பங்கீடு முறையைப் பற்றியும் சென்னை சர்க்கார் தயாரித்துள்ள திட்டத்தின் மீதுதான் இந்த விவாதம். சட்டசபைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மாகாண பஞ்சாலை கமிஷனர் (P. T. C.) ஸ்ரீ வெங்கடேஸ்வரனால் தயாரிக்கப்பட்டது.

நாட்டில் மில் துணி கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. கைத்தறி நெசவுத் துணியோ யானை விலை குதிரை விலை. பஞ்சமோ அகோரப் பஞ்சம். 60க்கு மேற்பட்ட மில்களையுடைய இந்த மாகாணத்தில், கைத்தறி நெசவுக்கு உலகப் புகழ்பெற்ற தென்னாட்டில், துணிப் பஞ்சம் பயங்கரப் பேயாய் வந்து நின்று மிரட்டுகிறது.

பஞ்சத்திற்கு ஜவாப்தாரி யார்? மில் முதலாளிகளும், டெக்ஸ்டைல் இலாகாவும்தான் இன்று கொதிக்கிற நெய்யில் விரல்விட்டுச் சொல்ல முடியும்.

முதலில், துணிப் பஞ்சத்தின் நிலைமையை சற்று கவனிப்போம். தேசியத் திட்டக் கமிட்டி (பண்டித ஜவஹர்லாலை தலைவராகக் கொண்...) கணக்குப்படி, துணி ஆளுக்கு ...தேவை. டெக்ஸ்டைல் ...போர்டின் கணக்குப் ...ளுக்கு 12கஜம்தேவை. ... கணக்குப்படி நமது ...கு 12010 பேல் ...ாயிலிருந்து நமக்குக் ...

5000 பேல்கள்
6000 ”
5100 ”

...ட்டா அளித்துவந்த ...படியிருக்கும்போது ...ருந்து (ஜூன்) மத்ய ...டாவில் 10 சத விகி... போகிறார்களாம். ...த்தியில் நமது மாகா... மாகாணம் என்பது ...சித்தம். நூல் ஏற்று...; ஆனால் நமது மாகா...ல் நெருக்கடி. மாகாண...ம் பரவிக் கிடக்கும் பத்...ணக்கான தறிகாரர்களுக்கு மாதத்தில் 10 நாள்தான் நூல் கிடைக்கிறதென்று சர்க்கார் அறிக்கையே ஒப்புக்கொள்கிறது.

நூல்-துணி பஞ்சம் ஏற்பட்டதின் காரணம் என்ன?

பஞ்சாலை மன்னர்களின் லீலைகள்

யுத்தம் வந்தது. கூட நெருக்கடியும் வந்தது. நெருக்கடியைச் சமாளிக்க வேண்டுமாயின், திட்டமிட்டு உற்பத்தி செய்தாகவேண்டும்; விலைவாசிகளைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். மில் முதலாளிகள் நூல்-துணி உற்பத்தியை திட்டமிட்டுச் செய்யவோ, விலையைக் கட்டுப்படுத்தவோ தயாராயில்லை. மத்திய சர்க்கார் பொறுப்பற்ற சர்க்கார். ஜனங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடாமல், ஜனங்களிடமிருந்து பிரிந்து தனி அரசு நடத்திற்று. இந்த நிலைமையை பஞ்சாலை மன்னர்கள் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டார்கள். சர்க்காரைத் தங்களிஷ்டப்படி ஆட்டி வைத்தார்கள். சர்க்காரும் அவர்கள் இழுத்த இழுவைக்கெல்லாம் வளைந்து கொடுத்தது.

நெல்சுரணையில் பெருச்சாளி

1943-ல் துணிக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக டெக்ஸ்டைல் கண்ட்ரோல் போர்டு என்ற ஒரு ஸ்தாபனத்தை மத்திய சர்க்கார் அமைத்தது. நெல் சுரணையில் பெருச்சாளியை வைத்துக் கட்டுவதுபோல் இந்த போர்டில், பெரும்பான்மையான அங்கத்தினர்கள் கொழுத்த வியாபாரிகள், கொள்ளைக்கார முதலாளிகள்.

- கிருஷ்ணராஜ் தாக்கர்ஸே 9 பஞ்சாலைகளுக்குச் சொந்தக்காரர். ஒரு டஜன் மில்களுக்கு டைரக்டர். இவர்தான் போர்டின் தலைவர்.
- கோகுல்சந்த் முநார்கா, 5000 பேல் துணியை வங்காளத்திலிருந்து கடத்திவந்த கருஞ் சந்தைப் புலி.
- கஸ்தூரிபாய், லாலாபாய் அகமதாபாத்தில் 7 மில்களுக்கு மானேஜிங் டைரக்டர். 70 பேல் துணி வங்கத்திலிருந்து கடத்தியவர். 1944ல், 4 கோடியே 88 லட்சம் லாபமாக விழுங்கியவர்.
- பதம்பாட் சிங்கேனியா, 5000டன் நிலக்கரி திருடர். 40,000 ரூபாய் அபராதம் கோர்ட்டால் விதிக்கப்பட்டது.
- கோவர்த்தனதாஸ், கோகுல்தாஸ் ...ரார்ஜி, சாக்கல்சந்த் ஷா முத...ிய கோடீஸ்வரர்கள் கட்டுப்...ட்டை எதிர்க்கும் கயவர்கள்.

...நண்டுக்கு காவல் நரி

...களெல்லாம் டெக்ஸ்டைல் கண்...ால் போர்டின், கமிட்டிப் பிரமுகர்களென்றால் வேறென்ன வேண்டும்? கண்ட்ரோல் போர்டு என்ற பெயரால் மத்திய சர்க்கார் ஒரு “எத்தர்கள் சங்கத்தை சிருஷ்டித்தது. அதனால் மில் முதலாளிகள் “கண்ட்ரோல்” செய்யப்படுவதற்குப் பதிலாக, போர்டை மில் முதலாளிகள் “கண்ட்ரோல்” செய்தார்கள்.

மேற்படி யோக்ய சிகாமணிகளின் கைகளில்தான் நமது மாகாணத்தின் நூல் உற்பத்தி விநியோகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்திருக்கும் காட்சி நடைபெறுகிறது. நமது ‘டெக்ஸ்டைல்’ இலாகாவும் அதே தண்டவாளத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. நூல்—துணி பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் ஆலை மன்னர்களை பரிபூரணமாக நம்பியிருக்கிறார் ஸ்ரீ வெங்கடேஸ்வரன். பண மூட்டைகளின் சுரண்டல் கொள்ளைகளை, பரிசுத்தமான உரிமைகளாக அங்கீகரித்து அவற்றைப் பாதுகாக்க முன் வருகிறது, சர்க்கார் அறிக்கை.

நூல் மறையும் மர்மம்

கைத்தறிகளை எடுத்துக் கொள்வோம். 5 லட்சம் தறிக்காரர்கள் இந்த மாகாணத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய பரிதாப நிலைமை சொல்லுந் தரமல்ல, மாதத்தில் 10 நாட்களுக்கு வேண்டிய நூல் தான் அவர்களுக்கு சட்டபூர்வமான வழிகளில் கிடைக்கிறது. ஆனால் அவர்கள் மாதத்தில் 20–22 நாட்கள் வேலை செய்கிறார்கள். இந்த ‘அற்புதம்’ எப்படி நடைபெறுகிறது? நமது மாகாணத்தில் நூல் கோட்டா சர்க்கார் அறிக்கைப்படி 21305 பேல்கள். இதில் சட்டப்படி விற்பனையாவது 8000 பேல்கள் மாத்திரமே. மிச்சமுள்ள 13000 பேல்களும் கள்ளமார்க்கெட்டில் விற்பனையாகின்றன. ‘கண்ட்ரோல்’ விலைப்படி 13000 பேல்களுக்கும் ஒரு கோடி ரூபாயாகிறது. ஆனால் கள்ளமார்க்கெட்டில் 3லிருந்து 4 கோடிக்கு விற்கப்படுகிறது. கைத்தறித் துணியின் விலை யானை விலை, குதிரை விலைக்கு ஏறுவது இயல்புதான்.

இனி, கள்ளமார்க்கெட்டில், நூல் மறையும் அதிசயத்தை நோக்குவோம்.

விநியோக விசித்திரம்

ஒவ்வொரு மில்லிலும் எவ்வளவு நூல் உற்பத்தி செய்யவேண்டுமென்று ‘டெக்ஸ்டைல் கண்ட்ரோல் போர்டு’ நிர்ணயிக்கிறது. உற்பத்தியும் பங்கீடும் ‘பானல்’ மெம்பரின் பொறுப்பு. மதுரை, சென்னை ஆலைகள் நீங்கலாக மிச்சமுள்ள ஆலைகளுக்கெல்லாம் ஸ்ரீமான் இரத்தின சபாபதி முதலியார்தான் பொறுப்பு. எந்த மில்லில் எத்தனை பேல் நூல் உற்பத்தி செய்யவேண்டும். எந்த ஜில்லாவுக்கு எத்தனை பேல் அனுப்பவேண்டும் என்று நிர்ணயிக்கவேண்டியவர் அவரே.

மில் முதலாளி நூல் உற்பத்தி செய்கிறார். ஜில்லாவுக்கு அனுப்புகிறார். பானல் மெம்பர் நிர்ணயித்தபடி அனுப்பவேண்டும். இத்தனை பேல்கள் இந்த ஜில்லாவுக்கு அனுப்பியிருப்பதாக ‘டெக்ஸ்டைல்’ கமிஷனருக்குத் தெரிவிக்க வேண்டும். குறிப்பிட்ட முதலாளி, குறிப்பிட்ட பேல்கள், குறிப்பிட்ட ஜில்லாவுக்கு அனுப்பினாரா, கூடுதலாக அனுப்பினாரா, குறைவாக அனுப்பினாரா, அனுப்பவேயில்லையா என்ற சோதனை நடைபெறுவதேயில்லை.

நூல் அனுப்பும் மில் முதலாளிக்கும் நூலைத் துணியாக்கும் தறிகாரனுக்கும் மத்தியில் இடைத் தட்டுப் பேர் வழிகள் எத்தனையோ பேர் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். கோட்டாகாரன், “கண்ஸைனி,” மொத்த வியாபாரி, இரண்டாந்தர — வியாபாரி, சில்லறை வியாபாரி, இத்தியாதி பலர் கை கடந்துதான் தறிகாரனுக்கு நூல் கிடைக்கவேண்டும். $10\frac{1}{2}$ ரூ. மில் விலையாயிருக்கும் ஒரு கட்டு நூலுக்கு, அவர்களெல்லோரும் சேர்ந்து குறைந்தபட்சம் 4 ரூபாயாவது ஏற்றாமல் விடமாட்டார்கள். ஒருவகையான தடையுமில்லாததால், இந்த இடைத் தட்டுக்காரர் கூட்டம், கள்ள மார்க்கெட் ‘திருக் கூட்ட...’ மாறிவிடுகிறது.

...ற்றுமதியில் திருட்... அடுத்த மாகா... ...மதி செய்வதில் ...டயோ, சோத...து. 1,500 கஜம் ...ரு பேலில் 3 அல்ல... ஆயிரம் கஜம் இருக்கும். ... 18 ரூ. விலை மதிப்புள்ள ஒரு ...ங்கி, கல்கத்தாவில் 44 ரூபாயாக விற்கிறது. சிட்டாகங்கில் 60 ரூ. அங்கிருந்து கள்ளத்தனமாக பர்மாவுக் கடத்தி 126 ரூ-க்கு விற்கிறார்கள். வழக்கமான வர்த்தக முறைகளைப் பாதுகாத்தல் என்ற பேரால் ...த லீலாவிநோதங்கள் நடைபெறுகின்றன. தறிகாரர்களும் பொது மக்களும் அல்லற்பட்டு அழுகிறார்கள்.

அழகப்பச் செட்டியார் (கொடை வள்ளல் என்று தமிழ்நாட்டில் பேர் “வாங்கிய” அதே அழகப்பச்செட்டி...ான்) கொச்சியில் மில் முத... சென்னையில் மொ... மாதா...தம் 1 ...ரம் கஜம் துணி ...வர். போதாக்... ...பேரால், சில்லறை ...று செய்கிறார்.

கொள்ளை லாபம்

